# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



தை 2019

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

தை 2019

ஆசிரியர்

சோபா

வடிவமைப்பு

நெகிழன், 7904748374



படைப்புக்களுக்கான முகவரி

R.Mahendtran
34 Redriffe Road,
Plaistow,
London E13 0JX .UK

மின்னஞ்சல்
mullaiamuthan16@gmail.com


**படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.**

நன்றி: இணையம்

# வணக்கம்,

காற்றுவெளி தைமாத இதழ் (2019) உங்கள் பார்வைக்கு வந்திருக்கிறது.
வடிவமைப்பில் அவ்வப்போது மாற்றங்களைச் செய்துவருகிறோம். இன்னும் மாற்றங்களைச் செய்யும் எண்ணத்துடன் ஆலோசித்துவருகிறோம். படைப்புக்களிலும் ஆய்வுக் கட்டுரைகளையும், மொழிபெயர்ப்புகளையும் அதிகமாக இணைக்க வேண்டும் என்பதும் பலரின் விருப்பமுமாகும். தை பிறந்தாயிற்று. பல கனவுகளும் இன்னும் பாக்கியிருக்கிறது.
இந்த ஆண்டிலாவது இனவிடுதலைக்கான மக்கள் எதிர்பார்க்கும் சூழல் ஏற்படல்வேண்டும். அகதிகளாக, சிறைக் கைதிகளாக அல்லல்படும் அனைவரும் விடுதலை பெறவேண்டும். ஏமாற்றமில்லாத பதிப்பகம் & படைப்பாளர்களின் நட்புறவும் மேலோங்கவேண்டும்.
புதிய புதிய வடிவங்களில் நமது எழுத்துகள் வரவும், பேசப்படவும் வேண்டும். ஈழத்து கனவுகளும், அவை தந்த நோவுகளும் வரலாறாய் பதிவுசெய்யப்படவேண்டும்.
மேலும்,
காற்றுவெளிக்கான வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டும் படைப்பாளர்களுக்கும் எமது நன்றி.
காற்றுவெளி அச்சிதழ் வரவேண்டும் என நினைக்கும் போதெல்லாம் சந்தா & விளம்பரம் எதுவுமில்லாத இதழைக் கொண்டுவருவதில் தாமதம் அல்லது அச்சமே எஞ்சி நிற்கிறது.
தை பிறந்திருக்கிறது. முயன்றுபார்ப்போம்.

நட்புடன்,

சோபா

© மெய்யன் நடராஜ்

# அதிசயப் பதுமை



கால்கொண்டு நடமாடும் கலையழகு
ஓவியம்
கண்பார்க்கின் பிறப்பெடுக்கும்
கவிஞர்க்குக் காவியம்
பால்நிலவின் பூமுகத்தில் பனித்துளியின்
சீவிதம்
பழங்கால சரிதைதனைப் பதுக்கிவைத்தக்
காகிதம்
நூல்கொண்டு இடைநெய்த நூதனத்தின்
நூதனம்
நூலாகாக் காவியங்கள் நோக்கநல்ல
நூலகம்
சேல்நீந்திக் களிக்கின்றச் சிறுநயன சாலகம்
சிக்குதற்கு மனப்பூச்சி சிறகடிக்கு
மனுதினம்.

✧

தேனருவி பாய்ந்துவரும் தேவதையா
ளதரம்
தீராத காதல்நோய் தீர்த்துவைக்கு மமுதம்
வானவெளித் தோன்றுகின்ற வானவில்லை
நிகர்த்த
வனப்புமிக்கச் சித்திரமாம் வஞ்சியவள்
புருவம்
கானகத்துப் பூங்குயிலின் கனிந்தமொழி
இசைவாய்
காற்றலையில் தவழ்ந்துவரும் காரிகையின்
குரலில்
ஆனமட்டும் நடனமிட்டு ஆடியாடி
மகிழ்ந்து
அனவரதம் மழைபொழிவை ஆதரிக்கும்
மயிலும்.

எத்தனுக்கும் ராத்தூக்க எமனாகும்
இரவை
ஏந்திழையாள் பேரழகு
எடுத்துவைக்கும் புதுமை
பித்தனைத்தும் தெளியவைக்கும்
பிணிமருந்துக் குடுவை
பெண்ணவளின் கண்ணசைவு
பில்லிசூன்ய கலவை
புத்தனவன் நேர்வரினும் புரண்டுவிழும்
குழியைப்
புன்சிரித்துக் கன்னத்தில் புரளவிடும்
மகிமை
அத்தனையும் கொண்டவொரு
அதிசயந்தான் பதுமை
அடியெடுத்து நடந்துவர ஆடவர்கண்
விடுமோ

◎ பூ.விவேக், திருப்பூர்.



# போட்டி

யார் முதலில்
அப்பாவை தொடுவது
என்கிற போட்டியில்
விரைந்து முதலில்
தொட முடிந்தாலும்
ஓட மறந்து நடக்கிறான்
வெற்றிக் குட்டி!
தன் கை பிடித்து
தத்தித் தத்தி நடை
பழகிக் கொண்டிருக்கும்
அன்புத் தங்கை
தோற்று விடாமலிருக்க...!

# கொஞ்சல்

என்னை யாரும்
கொஞ்சவில்லை என்ற
ஏக்கத்தை போக்கிய
பள்ளிச் சிறுமியின் கையில்
புன்னகை தவழ
நடனமாடி பறந்து செல்கிறது
சாலையோர சாமானிய
கடைக்காரரின்
பலூன்கள்...!

◎ **லக்ஷ்மி**

# அரளிவழிச் சாலை

பலரின் கனவுகள் வாழ்வாதாரங்களின்
சமாதிகளில்
பயணங்கள் தொடர்ந்து
கொண்டேயிருக்கிறது.
இரு புறங்களிலும் அழகழகான
வண்ணங்களில்
அரளிச் செடிகள்
பயனற்றதாய்
பூத்துக் குலுங்குகின்றன

அந்தச் சாலைக்கு
பசுமை வழிச்சாலையாம்
சொல்பவர்களுக்கு பசுமை
எது என்பது உணராத நிலையில்
அரளிச் செடிகளிலும்
தார்மூடிய சாலைகளிலும்
பசுமையாய் பணங்கள்
காய்த்துக்கொண்டே
இருக்கிறது அவர்களுக்கு மட்டும்

வாழை தென்னை தோப்புகளும்
வயல்களுமாக இருந்த
இடங்களெல்லாம்
தார் ரோடுகளாகிவிட்டது.
வயல்களிலும் தோட்டங்களிலும்
வயிறார மேய்ச்சல்கண்ட
ஆடுமாடுகள்
அண்டைமாநிலங்களில்
அடிமாடாகிவிட்டன.
கிணற்றுத் தொட்டிகளில் நீர் குடித்து
உள்ளுக்குள் சிலிர்த்து விளையாடிய
சிட்டுக் குருவிகளெல்லாம்
பசியாரவும்
விளையாடி மகிழவும்
எங்கு சென்றன
என்று தெரியவில்லை.

பாட்டன் முப்பாட்டன் காலத்து
நிலத்தை
விற்றுவிட்டுச் சென்ற மக்கள்
என்னவானார்கள் என்றும்
தெரியவில்லை
எங்காவது கட்டடக் காடுகளில்
வெந்துகொண்டும் இருக்கலாம்.

எதையும் உணர்ந்து கொள்ளாத
சாலைகள்
உயிர்களை விழுங்கி
உருண்டு கிடக்கும்
மலைப்பாம்புகளைப் போல
நீண்டு கிடக்கிறது

பெருநகரங்களை சுலபமாக
சென்றடைய சீறிப் பாய்ந்து
கொண்டிருக்கிறது வாகனங்கள்
கண்களை விற்று சித்திரம்
வாங்கிய குருடர்களாய்
விரைந்து கொண்டிருக்கிறார்கள்
அரளிவழிச் சாலையில் மக்கள். . .

# சுவடுகள் சொல்கிறது



வன்னிமரக் காடுகள் ஊடே விரவிக் கிடந்து
ஊமைக் காயங்களையும் நெருப்பையும்
உள்ளுக்குள் சுமந்து திரிந்து இன்று
வெப்பக் காற்றுகளாகி மண்ணோடு கலந்து
விதைக்கப்பட்ட உடல்களின்
சுவடுகள் சொல்கிறது

தந்தையை இழந்து
தாயை இழந்து
சொத்து சுகங்களை இழந்து
அக்கா தங்கை மனைவியென
குடும்பத்து பெண்களின்
கற்பினை காவு கொடுத்து
உயிராய் நினைத்த
மானம் இழந்து
முள்வேலிகளுக்குள் நெஞ்சம் சிதைந்து
வெற்றுக் கூடுகளான
உடம்பிற்குள் உயிர்மட்டும்
ஊசலாடிக் கொண்டிருக்க
வாழ்வாதார உரிமைக்கான
போராட்டத்தில் மிஞ்சிய
இளம் காலடிகளின்
சுவடுகள் சொல்கிறது

மிதித்து கசக்கி எறிந்தது
வெறும் புற்களை மட்டுமே
வேர்களின் பரவல்களையல்ல
ஒரு யுத்தத்தில் இரத்தத்தால் எழுதிச்
சென்றதும் முடிவுகளையல்ல
கடைசிவரை காய்ந்து கிடக்கும்
வேர்களானாலும்
துளி நீரில் துளிர்விடும்
அருகுகள் என்று. . . . .

# பயிர் மேய்ந்த வேலி

முனைவர்
ெ பெண்ணியம் செல்வக்குமாரி



தளிரைப் பயிரை வளர்த்தெடுப்பதும்
பாதுகாப்பளிப்பதும் அதன் வேலை...
வேலி பழமையானது
வேலி தொன்மையின் பின்மை
வேலி பொருண்மையானது
வேலி அரணுடையது
கட்டுப்பாடற்றச் சமூகத்தின்
கட்டமைப்பை உருவாக்கியதே
வேலிதான்....

வேலி முட்களால் நிறைந்து வரும்
ஆடுமாடுகள் மேயாதவாறு மிரட்ட
வேண்டும்....
பயிரின் செழிப்பில்
பாசம் ஊற வேண்டும்
அந்நியங்கள் நுழையாதவாறு
துல்லியமாக கணிக்க வேண்டும்
நேர்த்தியாக விளைவித்துக் கொண்டு
போகவும் வழிவிட்டுக் காத்திருக்கவும்
முடிந்தால் சொட்டுக் கண்ணீர்விட்டுத்
தழுவவும் வேண்டியிருக்கும்...

தாண்ட முயலும் பயிர்களுக்கும்
வேண்டிய விடை பகர்ந்து வழி
சொல்லவேண்டியிருக்கும்....

அத்தையதான வேலிதான்
இத்தகைய பயிரை
இப்பூவுலகில் ரொம்பி வழியும்
கொடுமைகளில் பெருங்கொடுமையான
மேய்தலைச் செய்திருக்கிறது அந்தோ....

**◎ கோ.ராஜசேகர்**



✦

*மிகப்பெரிய புத்தக்கண்காட்சி*
*ஆசையாய் ஓடி ஓடி*
*எடுக்கப்பட்டன*
*செல்ஃபி...*

✦

*திருமணத்திற்கு வந்த*
*போட்டோகிராஃபர்*
*புகைப்படம் எடுத்துக்கொண்டிருக்கிறார்...*
*மணமக்களை வாழ்த்த வந்த நண்பர்களின்*
*கைப்பேசியில்..!*



◎ தழல்

# யாருக்கும் வெட்கமில்லை



அதுவரை அனைவருடனும்
ஒத்துப் போய்
அமைதி காக்கும் அனைவரும்....

தனக்கென்று பாதகமான
சூழ்நிலை வரும் பொழுது
அவரவர் சுயநலம் காக்க சூழ்நிலைக்
கைதியாக
மாறி போகின்றனர்..

அவருக்கு நலமாய்
படும் ஒன்று பலர் கண்களுக்கு
இவர் பச்சோந்தியாய்
அவதாரமெடுக்கிறார்...

அதே சூழ்நிலையை...
இவர்கள் கையாளும் பொழுதிலே
அவருக்குள் பல கேள்விகள்
புன்னகையுடன்...

நிலையில்லா இவ்வுலகில்
நீயும் நானுமென்ன விதிவிலக்கா..

இனம் மொழி மதம்
எதுவாயினும் சரி
இவற்றை மிதித்து
ஜெயிப்பது சுயநலமே..

பிறப்பு முதல்
இறப்பு வரையிலான
எந்த ஒரு செயலிலும்
சுயநலம் தலை தூக்கும்போது
வெட்கபடத்தான் வேண்டும்...

நாம் நடத்தும் அவலத்திற்கும்
நம்மை சுற்றி நடக்கும்
அவலத்திற்கும்..

ஆம்
நாம் வெட்கம் கொள்ளத்தான்
வேண்டும்...

◎ நாகினி

# அழகு

ஈர்க்கும் விழிவழி நுழைந்த
இதயக் கூட்டின் காதலுடன்
ஈரிதழ் மொழியும் பேச்சழகு

ஆவல் ஓங்கி வந்தாலும்
அனுமதி வேண்டி நிற்கின்ற
ஆற்றல் உந்தன் பேரழகு

காண ஏங்கும் மனதினையே
கவிதை வடித்து இன்புறும்
காதல் கொண்ட மெய்யழகு

பார்க்க நாடும் கண்களில்
பழகும் நெறியை மீறாமல்
பாதை வகுக்கும் பண்பழகு

ஏற்றம் பெற்றிட உழைப்பதிலே
எண்ணம் நிறைவேறி இன்புற்று
ஏறி வரும் வயதழகு

வாழ்க்கை கனவின் ஓடத்தில்
வந்து நெருடும் ஆசைகளை
வாகாய் அடக்கும் திறனழகு

நீங்கா வலிமை உள்ளத்தில்
நித்தம் நிறைவாய் தொடர்ந்திடவே
நீடுழி வாழுமுன் பிறப்பழகு..



◎ கௌரி சுந்தரம்

சாணக்கிய குதிரையில்
சரித்திர சவாரி

புரவியின் முதுகினில்
புரளும் கருங்கூந்தலினை
விலக்கி எழுந்தவள்
விரைவாய்ப் பாய்கிறாள்

நந்தவனத்தொரு பறவை
நாடும் கடலினுள் -மீன்கள்
நர்த்தன மாடிடும் மயில்கள்
நன்றே ஒளிர்ந்திடும் ஆதவன்

இத்தனை எழிலையும்
இதமாய் மனதினுள்
ஏற்றவள் வென்றிட விரைகிறாள்
இலக்கு ஒன்றே அவள் குறி

இரத்தக் காட்டாறும்
வல்லினக் கூட்டமும்
காமுக நரிகளும் கூட
இவள் வீச்சினில் -தம் வீச்சிழந்திட

புரண்டவள் எழுகிறாள்
கனவு மெய்ப்பட எழுகிறாள்
கருங்கூந்தல் முடிந்தவள் எழுகிறாள்



◎ தேன்மொழி தாஸ்

# உயர்ந்த சொல் படரும்

மலைக்குகைகள் வழியாக
கழுத்தின் முடிச்சு
கெம்பீரித்துக் கொண்டிருக்கிறது
கெந்திச் செல்லும் காட்டுக்
கம்பளிப் பூச்சி
எதிர்காலத்தை அடிவயிற்றில்
தடவும்
வச்சிரதந்திப் புழுக்கள்
மரம்குடையும் காட்சி
மனதை மத்தியானம் ஆக்கும்
பொறிகலங்குதல் வீண்
துன்புறுதல் ஒருவகையில் உள்பாடு
அறிதல்
பாறைகள் மேலுள்ள எழுத்துகளை
சோலைமழை அழித்துச்
செல்கின்றது
காதல் அடையாளங்களை பதுக்கி
வைக்க வேறு களம் உண்டு
துன்புற்ற மாரிகாலம் ஸ்தலங்களில்
விம்முகிறது
இறந்த காலங்களை வணங்கத்
தெரியாதவனின் எதிர்காலம்
உன்னதங்களைக் காண்பதில்லை
ஊற்றுத்துவாரத்திற்கு தாழ்க்கோல்
தேடுகிறவனின் புத்தி தாழைப்புதர்
உயர்த்த சொல் படரும்
கூழாங்கல் விற்பவன் ஒருபோதும்
அறிந்ததில்லை ஒழுங்கின்மையின்
உத்தம தாகம்
கொட்டு வேலை செய்பவரின்
கைக்குச்சி இரவுகளைப் புரட்டும்
நயனமொழியை கனவறியும்
மழுங்கிய கொம்புடைய மாடு தனது
இயலாமையை வெற்றுத் தரையிடம்
காட்டும்
எண்ணத்தின் ஒளிக்குறிப்புகள்
கண்களில் மிதக்கும்
புலிக்குட்டியின் மேல் சவாரி
செய்யும்
புல் குருவி காற்றைச் சுவைக்கும்
சம்பூரணராகம் காடுகளின் மத்தியில்
தொங்குகிறது

*18.9.2017*

© ந. கிருஷ்ணசிங்கம்

# வேகம் புகுந்த வீரத்தோடு..



புனர்வாழ்வு முகாமிலிருந்து, நெடுங்காலங்களின் பின் விடுவிக்கப்பட்ட வடிவாம்பிகையும், கீதாலெட்சுமியும் புறப்பட்டுவந்த பஸ் வண்டி மட்டக்களப்பு கல்லடி உப்போடை நிலையத்தில் தரித்ததும், இருவரும் இறங்கித் தங்களின் வீடுகளை நோக்கி நடந்தார்கள்.

பல ஆண்டுக்கணக்காக அல்லல்களுற்று, மனவழுத்தத்தால் பாதியுயிர் மாய்க்கப்பட்டு, வெற்றுச் சக்கையாக, இற்றுப்போன உடல்களுக்குள் இருக்கும், நலிவுற்ற இதயங்களின் நாதமொலிக்க, இருவரும் மூசிமுனங்கிய தொனிகளில் உரையாடிக் கொண்டார்கள். ஒவ்வொருவரின் கைகளிலும் அங்கு, இறுதிநேரத்தில் கொடுக்கப்பட்ட, நீலநிறத்திலான இழுவைப்பெட்டி இருந்தன. அதனுள், புதிதாக வழங்கப்பட்ட துணிகளும், அவர்கள், விடுதலை செய்யப்பட்டதற்கான, அத்தாட்சிப் பத்திரமும் அடக்கப்பட்டிருந்தன.

வடிவாம்பிகை அந்த, நகரப்பகுதியில்தான் வாழ்பவள். ஆனால், சீதாலெட்சுமியோ கிராமத்தவள். அவள் நெடுந்தூரம் நடந்துதான் போகவேண்டும். அத்தோடு அடிபாட்டின்போது அவளோ ஊனமுற்றதால், வலதுகால் இயங்குவது சற்றுக்கடினமானது.

“வாகனம் ஏதும்பிடித்து விடட்டா?” என்று, வடிவாம்பிகை கேட்டபோது, “வேண்டாமடி. உதிலை கொஞ்சத்தூரம்தானே நான் நடப்பன்.” என்று, மறுத்துவிட்டு, சீதா வடிவைக் கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்துவிட்டுப் பிரிந்துசென்றாள்.

பலவாண்டுகளுக்குப்பின்பு, பிறந்தகத்தைநாடிப் பிறப்பட்டுவரும் சீதாவுக்கு, அந்த வீதியும், அயலட்டங்களும் புதுமையாகவே இருந்தன. விளைநிலங்களெல்லாம் தீண்டுவாரின்றிக் காடுவளர்ந்து தோன்றியன. மக்களரவமற்ற அந்தச்சூழலானது சற்றுமாறுதலடையும்வண்ணம் வீதிகளில் கார்களும், சைக்கிள்களும் இடையிடையே சவாரிசென்றன. தொலைவிற்கேட்ட ஒலிபெருக்கியின் ஓசையானது அவளின், நடைநோக்கிய திசையிலிருந்து வலுத்துவளரவே, அது நாதஸ்வரவொலியெனத் தெரிந்துகொண்டாள்.

ஊனமுற்ற அவளின் ஒற்றைக்காலில் வேதனையும் வளரவே, சீதா நொண்டிய தனது நடையைச் சற்றுமிதப்படுத்தி, மூச்சிறைக்கும் மார்பைத் தேற்றிக்கொள்ளச் சிறிதுநேரம்நின்று, தோளில்தொங்கிய பையிலிருந்த தண்ணீரையெடுத்து அருந்திக்கொண்டாள்.

ஊர் அம்மன் ஆலயத்தில் திருவிழா நடப்பதையும், சனத்திரளையும் தரிசிக்கும் இடத்திற்கு தனது, இழுவைநடையால் நெருங்கியவளை ஆச்சரியங்கள் சூழ்ந்துகொண்டன. அம்மன் ஆலயம் கோபுரகும்பங்களோடு அழகாகப் பெருமளவில் புதிதாக அமைந்திருந்ததையும், அதனைச்சூழ்ந்த அயல்களில் கல்வீடுகள்பலவும் தென்பட்டனவும், சீதாவுக்கு வியப்பைத்தந்தன.

ஒருவிதமாக தனது, வீட்டையடைந்துவிட்ட அவள், வீடுபூட்டப்பட்டிருந்ததையும், தனது அழைப்புக்கு எவரும் பதில் கொடுக்காமையும் விரக்தியைத்தரவே, மனம் சோர்ந்துபோனவளை,

"ஆர்மோனையது? இஞ்சையிப்பிடிவா!" என்றகுரல் அழைக்கவே, வேலியால் எட்டிப்பார்த்தபடி, அழைத்தவர் பக்கத்துவீட்டுப் பரிமளம் ரீச்சர்தான் என்பதை அறிந்து, அவள், அருகில்சென்று "ரீச்சர்! அது நான்தான். சீதாலெட்சுமி. என்னைத் தெரியவில்லையோ" என்று கேட்கவும், முதுமையடைந்த கோலத்தில் தோன்றிய அவர், சற்று நிதானித்து அதிர்ந்ததொனியில் "எடி! நீ.. இயக்கத்துக்குப்போன எங்கடை சீதாவே?"

"நீமோனை செத்திட்டாயெண்டல்லோ இந்த ஊரெல்லாம் கதைச்சவை. என்ரை அம்மா! நீ உயிரோடை இருக்கிறீயே! எனக்கு, எவ்வளவு சந்தோசமாகக்கிடக்கு. வாவாவீட்டை, உன்னைக் கட்டிப்பிடிச்சுக்கொஞ்ச ஆசையாயிருக்கு!" எனப் பரிமளம், சீதாவை அழைத்துச்சென்று, உபசரித்துத் தொடர்ந்து பல தகவல்களைச் சொல்லவே, அவள் மிகுந்த உன்னிப்போடு அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால், அவள் உணற்சிவசப்பட்டாலும் கண்களிலிருந்து நீர்வரவில்லை. ஏற்கணவே அழுதழுது அலறியோய்ந்ததினால், அவளின் கண்ணீரின்ஊற்று வற்றிப்போய்விட்டது.

அம்மாவும், அப்பாவும் இறந்துபோனதையும், தமக்கையார் சகுந்தலா திருமணம் செய்துகொண்டதையும், அவளுக்கு ஒரு குழந்தை இருப்பதையும், அவரும் அவவுமாகக் கோவிலில் கச்சான் கடைநடத்துவதையும், அவர்களின் குடும்பத் தட்டுப்பாடுகளையும் நீட்டிநிமிர்த்தி ஒரு நெடும் புராணத்தையே பரிமளம் வாத்தியார் நிகழ்த்திமுடித்தார்.

சீதா கோவிலுக்குச்சென்று, தமக்கையாரையும் அவரின் ஒப்பாரி ஓலத்தையும் வரித்துக்கொண்டவள், ஒரு வயதே நிரம்பிய அவர்களின் பிள்ளையை வாரித் தூக்கி அணைத்துக் கொண்டாள். அன்றையத் திருவிழா ஓய்ந்ததும், கடையை மூடிவிட்டு அவர்கள், வீட்டிற்கு வந்தார்கள். நள்ளிரவாகியதால் வாங்கிவந்த உணவையே அக்காவும் தங்கையும் பகிர்ந்து உண்டார்கள்.
"அவர், வெளியாலை போட்டார். நாங்கள் படுப்பம்." என்று சொல்லித் தங்கையாரை அணைத்தபடி, தமக்கையார் படுத்துவிட்டார். குழந்தை அவர்களின் இடையில் தூங்கியது.

நடுநிசிவேளை வந்த அக்காவின் கணவரோ, சீதாவைத் தட்டியெழுப்பினார். அவரிடமிருந்து மதுநெடிவீசியது. "சீதா சத்தம்போடாதே" என்ற மிரட்டல்ததும்பும் குரலோடு, மிருகத்தனமாக அவளை, அமுக்கியரவணைக்க முயன்றவரை, ஆக்கிரோசத்தோடு சினந்தெழுந்த சீதா.. ஒரே குத்திலே அவர் அறிவுதுவண்டு வீழும்வண்ணம் தாக்கினாள்.

அந்த, நள்ளிரவில் பிறப்பட்டு வெந்தழல் ஏந்திய வீறாப்போடு சீதாலெட்சுமி தனது, பொட்டியை இழுத்தவாறு, நொண்டிநொண்டி வேகம்புகுந்த வீரத்தோடு தெருவேறி நடந்தாள்.



© இரா. கவியரசு

# 1.கண்மணிப் பாடல்

நிலைத்தலற்றுப் பறக்கும்
கண்மணியின் பார்வைகள்
தாவிக்கொண்டே செல்கின்றன

ஒரு முறை அப்பாவைப்பார்
என்று கேட்கும் போதும்
அவள்
பறந்து கொண்டேதான் பார்க்கிறாள்

செல்ல முத்தம் என்றபோதும்
இதழ்களின் அச்சு
எல்லாக் கன்னத்திலும்
ஒன்று போலவே இருக்கிறது

வாசலுக்கு செல்லக்கூடாது
வாகனம் வரும் என
நான் வழிமறிக்கும் போதும்
காற்றாகி
கால்களுக்கு அடியில்
நுழைந்து வெளியேற முடியும்
அவளால்

கண்டிப்புகளின் சொற்கள்
கட்டெறும்புகளாய்
அவள் காதில் நுழையும் முன்
தித்திப்பு மழலை குழைந்து நிறைகிறது
விடுதலையை எடுத்துக் கொள்கிறாள்

கோபத்தில் உடல் பற்றி எரியும் போது
தோளைணைத்துக் கொஞ்சும்
கணத்தில்
காலால் உதைத்துக் கடல் ஊற்றுகிறாள்

பக்கத்தில் இருந்தாலும்
பத்து முறை அப்பா அப்பா
என்றழைத்து
என்னிலிருந்து உயிர் நகலெடுத்து
அவளைச் சுற்றி உட்கார வைத்து
கலைடாஸ்கோப் ஆக்குகிறாள்

நேர்க்கோடுகளை வளைப்பது
ஒழுங்கமைப்புகளை சிதறடிப்பது
திட்டமிடுதல்களை உடைப்பது
எல்லாவற்றுக்கும்
யாரிடமிருந்தோ அழைப்பு வருகிறது
இவளுக்கு

ஒரு பனித்துளி என் மகளென
கைகளுக்குள் பொத்தி வைக்கும்
என் பிரியங்களின் நடுக்க
இடைவெளியில்
காற்றாவியாகி
மேலே பறந்து வானமாகி
குழந்தை மட்டுமே
நான் என்கிறாள்.

# 2.ஒரு மிடறு இசை



ஒரு மிடறு இசையைக்
குடித்த பிறகே
உன்னைப் பற்றிய
கவிதையை எழுதுகிறேன்

பகலில் மழைக்காக
இருட்டாகும் வீட்டுக்குள்
மெல்லத் தொடங்குகிறது
நமக்குப் பிடித்த பாடல்

ஆடும் இசைக்கயிற்றில்
இந்தப் பக்கம் நான்
அந்தப் பக்கம் நீ
வழிவிடமுடியாத வழியில்
நடந்து வருகிறோம்


கோடை வெயிலில்
வெந்த ஆப்பிள்கள்
குளிர்க் கடலில்
நுழையும் போதே
மரக்கிளையில் தொங்கிய
குதூகலத்திற்கு திரும்புகின்றன

தண்டுவடத்தில் ஏறுகிறது
தவிப்பு
மூளையின் நரம்புகளுக்குள்
பொங்குகின்றன
வீணை மழைத்துளிகள்

ஆலாபனையில்
மிதக்கும் நம் முத்தங்கள்
நேர்க்கோடுகளில் சந்திக்கப்
பயணிக்கின்றன

தடம் புரளாமல்
ஓடுகின்றன
மன ரயில்கள்.
தண்டவாளங்களைப்
பார்த்துக் கொள்கிறது
இசை

சருகு எரியும் ஒலியில்
தொடங்கிய சுவாசங்கள்
காடுகளுக்குத் தாவுகின்ற
நேரத்தில்
சரியாக ஆரம்பிக்கிறது
மழை.




© க. நவம்

# ‘நான்காவது பரிமாணம்’

## சிற்றிதழ் பற்றிய ஒரு சிறுகுறிப்பு

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் ரொறன்ரோ நகரிலிருந்து வாராந்தப் பத்திரிகையாக ‘தாயகம்’ வெளிவந்துகொண்டிருந்தது. ஜோர்ஜ் குருஷேவ் அதன் ஆசிரியர், கனடா மூர்த்தி துணையாளர். இவ்விருவரினதும் வேண்டுதலின்பேரில் அப்பத்திரிகைக்கு ஆறு மாதங்களாக வாராவாரம் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதிவந்தேன். அந்நாளைய அனைத்துலக அரசியல் விவகாரங்களைச் சொல்லும் அக்கட்டுரைகளுக்கு, (பின்னர் ஒரு நூலாக்கப் பெற்றவை) வாசகர்கள் மத்தியில் வரவேற்பிருந்தது.

அக்காலகட்டத்தில், “ஒரு கலை இலக்கியச் சிற்றிதழுக்கான வெற்றிடம் ஒன்று இங்கு காணப்படுகிறது. அதனை ஏன் நாங்கள் நிரப்பக்கூடாது?” என்றும் - “உங்களை ஆசிரியராகக் கொண்டு சிற்றிதழ் ஒன்றை வெளியிட்டால் என்ன?” என்றும் ஜோர்ஜும் மூர்த்தியும் என்னிடம் வினவினர். அதனைத் தொடர்ந்து, நாங்கள் மூவரும் இணைந்து ‘நான்காவது பரிமாணம்’ எனும் இதழை வெளியிடும் முயற்சியில் இறங்கினோம். எனவே ‘நான்காவது பரிமாணம்’ இதழின் உருவாக்கத்திற்குக் கால்கோளிட்டவர்கள் ஜோர்ஜும் மூர்த்தியும்தான் என்பதே உண்மை. முதல் இதழின் முகப்பு, இலச்சினைகள், உள்வடிவமைப்பு யாவும் மூர்த்தியின் கைவண்ணத்தில் உருவானவை. தட்டச்சு, ஒப்பு நோக்கல், சந்தா சேகரிப்பு, விநியோகம் போன்ற பல்வேறு பணிகளில் என்னோடு இறுதிவரை பக்கபலமாக நின்று உழைத்தவர், எனது மனைவி ஷியாமளா.

துரதிஷ்டவசமாக முதலாவது இதழுடனேயே அந்த முக்கூட்டு ஒப்பந்தம் முறிந்து போனது. அதன் பின்னர் இதழின் முழுப்பொறுப்பும் எனது தலையில் வந்து வீழ்ந்தது. கூட்டாக ஆரம்பிக்கப்பட்டது, ஈற்றில் ஒரு தனிநபர் முயற்சியானது. இதழ் தொடர்பான சகல பணிகளிலும் எதிர்பார்த்து ஆரம்பிக்கப்பட்ட பங்களிப்புக்கள்

துண்டிக்கப்பட்டன. இந்நிலையில், இதனை ஒரு சவாலாக எடுத்துத் தன்னந்தனியனாக நின்று செய்துகாட்ட வேண்டும் என்ற அந்தநேர ஓர்மமே என்னைக் கொண்டிழுத்தது.

பத்திரிகை நடத்துவதிலோ அல்லது கணினிப் பாவனையிலோ எனக்கு அனுபவம் இருக்கவில்லை. இந்நிலையில் ஒரு கணினியை விலைக்கு வாங்கி, அப்போது 9 வயதுச் சிறுவனாயிருந்த எனது மகனிடமிருந்து அதன் நுட்பங்களைக் கற்றறிந்தேன். ஆக்கங்களை எனது மனைவி இரவிரவாகத் தட்டச்சுச் செய்துதர, நான் செவ்விதாக்கம் செய்தேன். பக்க வடிவமைப்புகளைச் செய்தேன். ஆக்கங்களுக்குப் படங்கள் வரைந்தேன். இருவருமாகச் சேர்ந்து ஒப்புநோக்கல் செய்தோம். நேரம், பணம் என்பன உட்பட, எனது குடும்பத்தின் ஒட்டுமொத்த உழைப்பும் இதில் முதலீடு செய்யப்பட்டன.

இலங்கையில் ஆக்கங்கள் பெற்றுத் தருவதிலும் இதழ் விநியோகத்திலும் எனது சகோதரர் தெணியான் உதவினார். இதன் பயனாக சபா ஜெயராசா, சோ. கிருஷ்ணராஜா, செ. யோகராசா, என். சண்முகலிங்கன் போன்ற கல்வியாளர்கள், இளங்கீரன், தெணியான், குப்பிளாண் ஐ. சண்முகம், செ. குணரத்தினம், எஸ்.எல்.எம். ஹனிஃபா, அந்தனி ஜீவா, எம்.கே. முருகானந்தன், ராஜ ஸ்ரீகாந்தன், கண மகேஸ்வரன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், முல்லை அமுதன் போன்ற ஆக்க இலக்கியப் படைப்பாளிகள், சோலைக்கிளி, ரி.எல். ஜஃபர்கான், வாசுதேவன், செல்வி, இளைய அப்துல்லா, கௌரி சுப்பிரமணியம், எம்.எல்.எம். அன்ஸார், நிந்தாமணாளன், ஈழக்கவி போன்ற கவிஞர்கள் ஆகியோரது படைப்புகள் கிடைக்கப் பெற்றன.

எழுத்தாளர், கவிஞர் கௌரி வழியாக தமிழ்நாட்டில் அரசு என அறியப்படும் நண்பர் ப. திருநாவுக்கரசுவின் அறிமுகம் கிடைத்தது. விளைவாக, சுப்பிரபாரதியமணியன், விக்கிரமாதித்தியன், பாவண்ணன், விழி பா. இதயவேந்தன், த. பழமலய், மு. மேத்தா, எஸ்.பி. ராஜதுரை-வ. கீதா, வைக்கம் முகம்மது பஷீர் (மொழிபெயர்ப்பு - ரவி இளங்கோவன்), கோபி கிருஷ்ணா, ப. சோழநாடன் ஆகிய தமிழகப் படைப்பாளிகளது படைப்புகள் நா.ப.வில் இடம்பெற்றன. நா.ப. தாங்கிவந்த விடயங்களில் க. நவம், மாலனுடனும், தஞ்சை பிரகாஷ், கே. டானியலுடனும் நிகழ்த்திய நீண்ட நேர்காணல்கள் இன்றுவரை பேசப்படுபவை. ஐரோப்பிய-அவுஸ்திரேலிய கண்டங்களில் இருந்து எஸ். அகஸ்தியர், கலைதாசன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், க. ஆதவன், கி.பி. அரவிந்தன், பார்த்திபன், அருந்ததி, கமலா முகுந்தன் போன்ற பலரும் பங்களிப்புச் செய்தனர்.

கனடாவில் நா.ப.வின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அதன் குறுகிய காலப் பயணத்தில் முக்கியமாக என்னோடு கைகோர்த்து நடந்த படைப்பாளிகள் இருவர். அ. கந்தசாமி அவர்களுள் ஒருவர். அடுத்தவர் சக்கரவர்த்தி. இவர்களது ஆக்கங்களுடன் த. சிவதாசன், நிலா குகதாசன், சேரன், பா.அ. ஜயகரன், அளவெட்டி சிறீசுக்கந்தராசா, மொனிக்கா, கௌரி, திலீபன், ரவிஅமிர்தன், நாவற்குழியூர் நடராஜன், சின்னையா

சிவனேசன், இலங்கையன், டி.பி.எஸ். ஜெயராஜா, சபா வசந்தன், நளாயினி மூர்த்தி, சுதர்ஷனா, சம்பு, வே. ராஜலிங்கம், காங்கயி, புஷ்பா கிறிஸ்ரி, அ. அருணன், வீணைமைந்தன், மாயவன், ஷியாம் போன்ற மேலும் பலரது படைப்புகள் நா.ப.வில் இடம்பெற்றன. சிவதாசனின் 'மறுபக்கம்,' சக்கரவர்த்தியின் 'அந்தப்புரம்' தொடர்கள் நா.ப.வுக்கு அழகு சேர்த்தன.

நா.ப. தாங்கி வந்த ஆசிரிய தலையங்கங்கள் வாசகர்களால் பெரிதும் சிலாகிக்கப்பட்டன. "எமது சமுதாயத்தில் புரையோடியுள்ள பலவிதமான பொய்மையினை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகிற தன்மை, நா.ப. ஆசிரியரின் எழுத்தில் காணப்படுகின்றது" என 'நா.ப.வின் ஆசிரிய தலையங்கங்கள்' எனும் தலைப்பிலான கட்டுரையில் விமர்சகர் ப. ஸ்ரீஸ்கந்தன் (செந்தாமரை, 06-08-1992) எழுதியுள்ளமையும் - "அவுஸ்ரேலியாவிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் 'மரபு,' - லண்டனில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கும் 'தமிழன்' ஆகிய பத்திரிகைகள் நா.ப. இதழ்களின் ஆசிரிய தலையங்கங்களை மீள்பிரசுரம் செய்திருக்கின்றமை அவற்றிற்குக் கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரத்துக்கான ஆதாரம் ஆகும்" என 'நான்காவது பரிமாணம் - ஒரு மீள்பார்வை' எனும் தலைப்பிலான கட்டுரையில் விமர்சகர் சசிகலா (தமிழோசை, 20-12-1991) எழுதியுள்ளமையும் கவனிப்புக்குரியன.

நா.ப.வில் எழுதியவர்களும் அதன் வாசகர்களும் நா.ப. குறித்து ஏராளம் கடிதங்கள் நா.ப. இதழ்களில் பிரசுரமாயின. குறிப்பாக, தலாத்துஓயா கே. கணேஷ், எஸ். சிவசேகரம், செல்வா கனகநாயகம், கே. தங்கவடிவேல், வி. பொன்னம்பலம், பொன் பூலோகசிங்கம், மக்கத்துச்சால்வை எஸ்.எல்.எம். ஹனிஃபா, இந்திரா பார்த்தசாரதி, ப. கல்பனா, கி. ரெங்கராஜன் போன்ற கலை இலக்கிய ஆளுமைகளும் ஆர்வலர்களும் இதழாளர்களும் அவ்வப்போது எழுதி அனுப்பிய பயன்மிக்க கடிதங்களையும் தாங்கி நா.ப. இதழ்கள் வெளிவந்தன. பலதரப்பட்ட அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய இக்கடிதங்கள் நா.ப.வின் முக்கியத்தினை வலியுறுத்தின.

1991 செப்டெம்பர் முதல் 1992 மே வரை, மாத இழாக வெளிவந்து, இடைநின்ற நா.ப., பின்னர் புதுப் பொலிவுடன் கையடக்கமான வடிவத்தில் மீண்டும் 1993 ஏப்ரல் தொடக்கம் 1994 ஏப்ரல் வரை காலாண்டு இதழாக மலர்ந்தது. ஓவியர்கள் சௌந்தர், புகழேந்தி ஆகியோரது சித்திரங்கள், எழுத்துருவங்கள் சில இதழ்களின் அட்டைகளை அலங்கரித்தன. ஈழத்தமிழர் பரவி வாழ்ந்த ஏனைய உலக நாடுகளிலிருந்து பல இலக்கிய நண்பர்கள் தமது பங்களிப்பை மனமுவந்து நல்கினர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நூற்றுக்கும் அதிகமான சந்தாதாரர் சேர்ந்தனர்; ஆக்கங்கள் அனுப்பியோர் பலர் இருந்தனர்; ஏராளம் வாசகர்கள் இருந்தனர். இவர்கள் எல்லோரும் 'கல்லைப் பிழந்து கடலோரம் முட்டை வைக்கும்' எனது இதழியல் முயற்சிக்குக் கைகொடுத்து உதவியவர்கள்.

‘மானுடத்தின் உயர்வுக்கு வேண்டிய அனைத்து அம்சங்களையும் நான்காவது பரிமாணத்தினுள் அடக்கி, அவற்றினை மக்கள் இலக்கியங்களாக வெளிப்படுத்துவதை இலக்காகக் கொண்டே, இந்த இலக்கிய யாகத்தில் இறங்கியுள்ளோம். காலதேச வர்த்தமானங்களை உணர்ந்து, பழைய மரபுகளின் ‘உயிரற்ற அலங்காரங்களை’ உடைத்தெறிந்து, வாழ்வியலின் புதிய பரிமாணங்களைப் பிரதிபலிக்கும் சிருஷ்டிகளின் களமாக நான்காவது பரிமாணம் அமையும்’ என செப்டெம்பர் 1991 வெளிவந்த முதல் இதழின் ஆசிரிய தலையங்கம் தெரிவித்திருந்தது.

மேலும், ‘நான்காவது பரிமாணம் சில்லறைத் தனமான கிளுகிளுப்புகளை ஒருபோதும் வாசகர்களிடத்தே ஏற்படுத்தப் போவதில்லை. அதேசமயம், சாதாரண வாசகர்களது அறிவாற்றல்களுக்குள் அகப்பட மறுக்கும் கனதியான படைப்புகளைத் திடீரெனத் தலைக்குள் புகுத்திப் ‘பூச்சாண்டி’ காட்டவும் முற்படப் போவதில்லை’ என்றும் - ’பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார காரணிகளின் உதைப்புகளினால் இன்று சர்வதேச இனமாகப் பரிணாமம் அடைந்துவிட்ட எம்மவரின் எண்ணங்களையும், ஏக்கங்களையும், புதிய வாழ்க்கை அனுபவங்களையும், புதிய கலாசாரப் பாதிப்புகளையும் பிரதிபலிக்கும் தளமாக நான்காவது பரிமாணம் பரிணமிக்கும்’ என்றும் - ‘எமது மொழியின், எமது இனத்தின், எமது மண்ணின் இன்றைய உடனடித் தேவைகளை நான்காவது பரிமாணம் மதிக்கின்றது; கௌரவிக்கின்றது. அவற்றை எய்துவதற்கான நியாயமான முயற்சிகளுக்காகவும் நான்காவது பரிமாணம் எப்போதும் குரல் கொடுக்கும்’ என்றும் அதே முதலிதழின் ஆசிரிய தலையங்கம் ‘கொள்கைப் பிரகடனம்’ செய்திருந்தது.

ஈழத்தில் பல தமிழ் ஆயுதக் குழுக்கள் தத்தமக்குள் பொருதுமோதிக் கொண்டிருந்த அத்தருணத்தில், ‘நான்காவது பரிமாணம்’ இயக்க சார்பேதுமற்ற ஒரு நடுநிலையான இலக்கிய இதழாகவும், பல்வேறு கருத்துநிலைகளுக்கும் சமமாக இடமளிக்கும் ஓர் உரைகளமாகவும் இயங்கும் என ஆரம்பத்தில் அறுதியிட்டுக் கூறியிருந்தது. இதனடிப்படையில், நா.ப. இதழ்களில் பலவகைப்பட்ட அரசியல்-இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், கதைகள், கவிதைகள் வெளியாயின. அவைமீதான எல்லாவித எதிர்வினைகளையும் பிரசுரிக்க நா.ப. சித்தமாக இருந்தது. ஆயினும் எவை குறித்தும் எவரும் மூச்சுக் காட்ட முன்வரவில்லை!

அதே நாட்களில், ‘இலக்கியவாதிகளும் போதனாசிரியர்களும்’ என்னும் தலைப்பில் அவுஸ்திரேலியாவிலிருந்து லெ. முருகபூபதி எழுதிய கட்டுரை ஒன்றினை, வாதப் பிரதிவாதங்களை எதிர்பார்த்து, நா.ப. வெளியிட்டிருந்தது. நண்பர் சபாலிங்கம் பாரிசில் படுகொலை செய்யப்பட்டமை, பத்திரிகைச் சுதந்திரத்தையும் தனிமனித ஜனநாயக உரிமையையும் மீறும் செயல் என நா.ப. கண்டனம் தெரிவித்திருந்தது. இவற்றைத் தொடர்ந்து, அதில் வெளிவந்த அனைத்து ஆக்கங்களும் அந்நாளைய

ஆயுதம் தாங்கிய ஆதிக்க சக்திகளால் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கப்பட்டன. நா.ப.வின் யாழ்ப்பாண விநியோகம் தடை செய்யப்பட்டது. பல ஆக்கங்களைக் கடுமையாக விமர்சித்தும், நா.ப.வின் செயற்பாடுகளைக் கண்டித்தும் நீண்டதொரு எச்சரிக்கைக் கடிதம் வந்தது. மொட்டைக் கடிதங்கள், அநாமதேயத் தொலைபேசி அழைப்புகள் சுமந்து வந்த அவதூறுகளும் அச்சுறுத்தல்களும் இரவின் அமைதியைக் கலைத்தன.

இதேவேளை, ஈழத்தில் போர் உக்கிரமடைந்தது. அதனால் அங்கிருந்து தரமான படைப்பாளிகளது ஆக்கங்களைத் தருவிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. பலர் எழுதும் மனோநிலயில் இருக்கவில்லை. பலருக்கு அச்சம் தடையாக இருந்தது. இதனால் கனடாவிலும் ஏனைய நாடுகளிலும் இருந்து ஆக்கங்களுக்காக, எழுதுவோரிடம் கையேந்தவேண்டி இருந்தது. கிடைக்காத பட்சத்தில், இடைவெளி நிரப்பவென ஆசிரியரே பல பெயர்களில் புதுப்புது அவதாரமெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைவேறு இருந்தது. இலங்கையிலும், இந்தியாவிலுமிருந்து ஆக்கங்களை அனுப்புவோர்க்கு நா.ப. சிறுதொகைப் பணத்தைச் சன்மானமாகக் கொடுத்துவந்தது. உள்ளிருந்தும் புறமிருந்தும் ஆக்கம் அனுப்புவோர்க்கு ஒவ்வொரு பிரதியை இனாமாக, தாபாலில் அனுப்பிவந்தது. இவற்றுடன் அச்சேற்றம், விநியோகம் என்பற்றில் ஏற்பட்ட செலவினங்களும் இணைந்து, பாரிய பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தியது.

இலக்கிய ஆர்வலர்களுக்கு மட்டுமேயான ஓர் இலக்கியச் சிற்றிதழுக்கு இருக்கக்கூடிய பெருத்த சவாலான ‘சாதாரண மக்களுக்குள் ஊடுருவ முடியாமை’ நா.ப.வுக்கும் இருந்தது. இந்நிலையில், விளம்பரங்களை நம்பியிராமல், விற்பனையிலும், சுய முதலீட்டிலும் மட்டும் தங்கியிருந்த நா.ப.வின் சந்தாவைக் குறிப்பிட்ட தொகைக்குமேல் பெருக்கிக்கொள்ள முடியாமற் போய்விட்டது. மேலும் கனடாவுக்கு வரும் ஈழத்தமிழரின் எண்ணிக்கை பெருகப் பெருக, தமிழ்நாட்டிலிருந்து ஏராளம் ஜனரஞ்சகமான பொழுதுபோக்குச் சஞ்சிகைகளும், சினிமாப் படங்களும், தொடர் நாடகங்களும் வந்து குவிந்தன. அவற்றின் கவர்ச்சிக்கு அடிமைப்பட்டு அள்ளுண்ட எமது மக்களின் கவனத்தை ஒரு சாதாரண இலக்கியச் சிற்றிதழால் திசைதிருப்ப முடியாமற் போயிற்று. சிற்றிதழ் முயற்சி என்பது எப்போதும் ஒத்த சிந்தனை, குறிக்கோள், இலட்சியம் கொண்ட ஒரு குழுவினரின் கூட்டு முயற்சியாக, இருக்கவேண்டுமே தவிர, தனியாளாக நின்று அதனை வெற்றிகரமாகச் செய்துமுடித்தல் அவ்வளவு சுலபமல்ல. இவ்வாறு கூட்டாகச் சேர்ந்தியங்கும் வாய்ப்புக் கிட்டாதமையும் நா.ப. தொடர முடியாமல் போனமைக்கு இன்னொரு காரணம்.

இப்படியாக நா.ப. நடத்துவதில் எதிர்கொண்ட சவால்களை நாட்கணக்கில் சொல்லிக்கொண்டே போகலாம்!

இதேவேளை, பல புதிய படைப்பளிகளை நா.ப. இலக்கிய உலகுக்கு அறிமுகம்

செய்திருக்கின்றது. கனடாவில் அ. கந்தசாமி, நிலா குகதாசன், சக்கரவர்த்தி, நளாயினி மூர்த்தி, புஷ்பா கிரிஷ்ரி, மாயவன், ரவி அமிர்தன் போன்ற பலர் அடங்கிய பட்டியலை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இதேபோல இலங்கை உட்பட, வேறுசில வெளிநாடுகலிருந்தும் பல புதிய படைப்பாளிகள் நா.ப. மூலமாக படைப்புலகுக்கு அறிமுகமானார்கள். கே. டானியல், மாலன் போன்றவர்களது சிறந்த நேர்காணல்களையும், பேராசிரியர்கள் சபா ஜெயராஜா, சோ. கிருஷ்ணராஜா, செ. யோகராசா போன்ற ஆய்வாளர்களது கலை இலக்கியம் பண்பாடுசார் தொடர் கட்டுரைகளையும், இளங்கீரன், அகஸ்தியர், தெணியான், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், க. ஆதவன் போன்ற மூத்த படைப்பாளிகளின் கதைகளையும், சேரன், சோலைக்கிளி, ஜயகரன், நிலாகுகதாசன் போன்ற பேர்பெற்ற கவிஞர்களது கவிதைகளையும், பாவண்ணன், சுப்ரபாரதியமணியன், வைக்கம் முகம்மது பஷீர், விழி பா. இதயவேந்தன் போன்ற பல தமிழகப் படைப்பளிகளின் ஆக்கங்களையும் புலம்பெயர் இளம் தலைமுறையினர்க்கு நா.ப. அறிமுகம் செய்துள்ளது. போர்ச் சூழலால் துண்டாடப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் - இந்திய மற்றும் ஏனைய வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பளிகளுக்கும் வாசகர்களுக்கும் இடையே ஒரு பாலமாக நா.ப. விளங்கியிருக்கின்றது. அத்துடன், இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து ஆக்கங்களை அனுப்பிய படைப்பாளிகளுக்கு நா.ப. சன்மானம் வழங்கியமை ஒரு சாதனை மட்டுமன்றி, இதழ் நின்றுபோனபோது, சந்தாவின் மீதிப்பணத்தை ஒரு சதம் தன்னிலும் தவறாமல் சந்தாதாரருக்குத் திருப்பி அனுப்பிய நேர்மை - பெருமை நா.ப.வுக்கு எப்போதும் உண்டு. மேலும் நா.ப.வின் பெயரில் தொடர்ந்து இயங்கிவரும் வெளியீட்டகத்தினூடாக இதுவரை 20 நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

அன்றைய சூழலில், கைக்கெட்டிய முலவளங்களுடனும், கையிலிருந்த அறிகை தெரிகையுடனும், சொற்ப அனுபவத்துடனும் சாத்தியமானதை மட்டுமே நா.ப.வினால் சாதிக்க முடிந்தது. இன்று கிடைக்கும் தொடர்புச் சாதனங்களும், தொழில்நுட்ப வசதியும் அறிவும் அப்போது கிடைக்கப் பெற்றிருப்பின், பன்மடங்கு சிறப்பான இதழ்களாக அவை வந்திருக்க முடியும். ஆகையால் உள்ளடக்கங்களிலும் சரி, உருவத்திலும் சரி நா.ப. உச்சங்களைத் தொட்டதாகச் சொல்ல முடியாவிட்டாலும், அன்றைய சூழலில் அதனை ஒரு தனிமனித சாதனை என்றே சொல்ல வேண்டும்.

எது எப்படியாயினும், பலருக்கும் பிற்காலத்தில் இலக்கிய இதழ்கள் வெளியிடத் தேவையான தூண்டுதலையும் துணிச்சலையும் நா.ப. தந்தது. நா.ப.விலிருந்தது போல இருக்கவேண்டும் எனவும் - இருக்கக்கூடாதெனவும் பிற்கால இதழியலாளர்கள் தீர்மானம் எடுக்கவெனச் சில நல்ல - நல்லதல்லாத உதாரணங்களை அது தன்னகத்தே கொண்டிருந்தது. புலம்பெயர் சூழலிலான இதழியல் துறைக்கு ஒரு தொடக்கப் புள்ளியாகவும் முன்னோடியாகவும் நா.ப. இருந்தது. இறுதியில், பொருளாதார

நெருக்கடிகள், சமூக-பண்பாடுசார் சவால்கள், குடும்ப நிர்ப்பந்தங்கள், அந்நாளைய ஆயுதக் குழுக்களின் ஆதிக்கங்கள், ........... என்பன காரணமாக, பதின்மூன்றாவது இதழுடன் 'நான்காவது பரிமாணம்' தனது மூச்சை நிறுத்திக்கொண்டது!

புலம்பெயர் ஈழத்தவரின் பண்பாட்டு அடையாளங்களை இனங்காட்டுவதற்கும், அவற்றின் அசைவியக்கத்தைப் பதிவு செய்வதற்கும், அவற்றிற்கு உந்து சக்தி அளிப்பதற்குமென அறிமுகம் செய்யப்பட்ட 'நான்காவது பரிமாணம்' - அதன் வெற்றி தோல்விக்கும் அப்பால் - தனக்கென ஓர் அடையாளத்தை நிறுவிக்கொண்டே தனது மூச்சை நிறுத்திக்கொண்டது என்பது வரலாறு!

அந்த இலக்கிய வரலாற்றைக் கண்ணியத்துடன் ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்!

---

© மல்லை மு.இராமநாதன்

# செடியில் சிரியுங்கள்




மலர்களுக்காக வண்டுகளை
வரவேற்க
மலரிதழ் விரல்களை
அசைக்காதே தென்றலே
மகரந்தங்களே
தாய்மையாவதைதள்ளிப்
போடுங்கள் வண்டுகளை
சூலாக்கி வழியனுப்புங்கள்
பூப்படைந்த கன்னியராய்
புன்னகையுங்கள் என் தலைவி
வருகிறாள் தலையை ஆட்டி
வாழ்த்துரையுங்கள் அவள்
என் மடியில் படுத்து என்
முகத்தை நோக்கும்போது
செடியில் படுத்த நீங்களாய்
தெரிகிறாள்
செடியில் சிரியுங்கள்

## ◎ எஸ்.சண்முகம்




நாட்களைக் கடந்து நின்றிருக்கின்றன
சாலைகளின் திருப்பங்கள்
தாள்களை இழந்த நாட்காட்டியின்
முகவெறுமையில் தேங்கியுள்ளன
பொழுதுகள்
அன்றாடம் கடக்கும்
திசையிரண்டும் எதிரெதிராய் மீள்கின்றன
அதே இடங்களின் அதே இனிமைச்
சுரப்பதில்
ஒருநாளும் பொய்த்ததிலை
பொருத்திப் பொருத்திப் பார்த்ததில்
நிலைகொள்ளாமையே வளர்கிறது
அவநிமித்தங்கள்தோறும்
பொருந்தா நபர்களே சதா கடக்கின்றனர்
நேற்றைய சந்திப்பில்
காலணிகளில் இடறும்
தவறிவிழுந்த இன்முகம்
யாருடையதாயினும் என்ன?
காணத்தவறியவர்கள் யாவருள்ளும்
நானுமிருக்கிறேன் என்பதைச்
சொல்லிவிடுவதற்குள் .....
கடக்கும் நிழலாய் காகமொன்று
அருகே ஒருவருமற்ற
அதே திண்தோள்மீது
எச்சமிட்டு அசைகிறது
காணும்வரை

© வேதா. இலங்காதிலகம்.
டென்மார்க்

# பழமையாம் பல்லாங்குழி.

புல்லாங்குழலின் துளைகள் போன்று
பெரிதாக
பல்லாங்குழியில் பதின்னான்கு துளைகள்
கண்டேன்.
வல்லமையாய் என்னாளும் விளையாடும்
ஆட்டம்
பன்னாங்குழி என்றும் முன்னோர்
அழைத்தாராம்.
பகிரும் காய்கள் பதின்னான்கு
குழிகளில்.
பளபளக்கும் சிறு கண்ணாடி
உருண்டைகள்
பசுந்தான கடற்கரைக் கற்கள், சோகிகள்,
புளியங் கொட்டைகள், விதைகளும்
காய்களாம்.

பாரம்பரிய விளையாட்டு, பாண்டி
என்றும்
பாலர் வகுப்பிலும் பாவனை உண்டு.
எல்லாமாக மூன்று வகை ஆட்டம்
பசுவாட்டம், முத்தாட்டம்,
கட்டாட்டம் என்று
புகட்டுகிறது சிக்கனம், சேமிப்பு,
இழப்பென்று.
பல தேசத்தவரும் பகலிரவாய்
விளையாடும்
பல்லாங்குழி திண்ணையிலமர்ந்தும்
பரவசமாய் ஆடுவார்.
மதிவன்மையுடைய எட்டாயிரமாண்டு
பழைமை உடையது.

மண்ணிலும் ஏழேழு குழிகளோடு
ஆடுவது.
மரம் உலோகத்தில் வந்து முன்னேறியது.
மகிழ்ந்து ஆடும் இவ் விளையாட்டு.
முன்னைய நல்லதொரு திருமண
சீர்வரிசை.
வில்லங்கம் இன்றி ஆட்டம்
தொடரலாம்
அல்லாடும் மனசு ஆட்டத்தில் தவறி
நல்லாய் ஏமாற்றுவோரும் எரிச்சலோடு
தொடர்வார்.
வெல்லாவிடில் கோபம் திடீரென
வருமே!

எகிப்திய பிரமிட்டிலும் இச்செதுக்கல்
உண்டாம்.
ஆபிரிக்கா, சூடான், உகன்டா,
கென்யாவிலுமுண்டாம்.
எண்ணும் திறன், விரல்களில்
இரத்தோட்டம்,
நுண்ணிய கணிதத் திறன் வண்ணமாய்ப்
பெருகுமாம்.
இந்தியில் மங்கலா, பிலிப்பைன்ஸ் நாடு
இந்தோனேசியாவில் சொங்கக், சுங்க
என்றும்
இது சங்க்யா (எண்ணிக்கை) சமஸ்கிருதத்
திரிபாம்.
எழுபது காய்களில் ஆடும் விளையாட்டு

◎ பாரியன்பன் நாகராஜன்

# நாளை வரலாறு பேசும்

கடைசியாய் அனுப்பிய
ஒற்றைச் சொல்லில்தான்
நான் இன்னமும்
இருந்து கொண்டிருக்கிறேன்.

கால்வாயில் இறங்கவே
பயப்படுகிறவனுக்கு
குளத்தின் ஆழம் தெரிந்திருக்க
வாய்ப்பில்லை.
அவன் கடலில் மூழ்கி
முத்தெடுக்கப் போவதும் கனவுதான்.

தலைக்கவிழ்ந்த கதிர்களை
நோட்டமிடும் நீ
தானியமாகிடுவாயா என்ன?
மருந்து மாத்திரைகளை
உண்டுதிளைக்கும்
இரசாயன மனிதனாயிற்றே நீ.

கைகொட்டிச் சிரிக்க
அனுமதிகோரி நிற்பவனால்
எந்தவொரு முடிவையும்
சுயசிந்தனையோடு எடுக்க
முடியாதென்பதை எப்போது நீ
தெரிந்து கொள்ளப் போகிறாய்?
வேர்செத்த மரங்கள்
பூப்பதுமில்லை காய்ப்பதுமில்லை
அதன் கருணை மனதினை
பூமியறியாமலே மடிந்துதான் போகும்
ஆமாம்.

உனதந்த
ஒற்றைச் சொல்லெடுத்துக் கொண்டு
போகிறேன்.
நான் திரும்புவதென்பது
காலத்தின் கைகளில் பூரணமாய்
இருக்கிறது.


போனவன் கதை
போனதாகவே இருக்கட்டும்.
இனியாவது மனிதநேயத்துடன்
வாழப் பழகிக்கொள்.
இங்கு சுயநலமற்றவர்கள்
மிகவும் குறைவு.
மரங்களைப்போல் தன்னலமின்றி
வாழ்ந்து பார்
உன்னை நாளை வரலாறு பேசும்.
நீயே வரலாறுமாவாய்.

◎ நேசமித்திரன்

நம் எல்லையில் இல்லாத ஓர் கைமீறிய
துக்கத்தில்
விசும்பிக் கொண்டிருப்பவளை
திமிர திமிர அணைத்து சமாதானப்
படுத்தும்போது
அழாமல் இருக்க முயல்வது
மது வாசனையோடு குழறும் பாகனின்
ஆணைகளுக்கு யானை தடுமாறுவது
கண்ணீர் மீதான
முத்தங்கள் செத்து விழுவதை
மடியேந்தி வருடிக் கொடுப்பது
கூட இருப்பது
கூடவே இருப்பதை கோதிச் சொல்வது
அல்லது மௌனித்து வடியக்
காத்திருப்பது
மறவாமல்
இயல்பு மீண்டபின்
அந்த சமாதானத்தின் மீது
எந்த கோரலும் இல்லாமலிருப்பது

◎ தேவ ராணி. சி

# காதல் நதி



காதல் மழையின் சாரல்
மலரின் மகரந்த தூற்றல்

அகவும் மயிலின் நடனம்
கூவும் குயிலின் ராகம்

கொட்டும் அருவியின் ஓசை
பட்டுப் பூச்சிகளின் இன்னிசை

புதிய மோகம் புனலின் வேகம்
புயலின் மையம் குழலின் கீதம்

கடலின் ஆழம் மலையின் உயரம்
பனியின் குளிர்மை தீயின் உச்சம்

வீசும் தென்றல் வீணையின் நாதம்
பேசும் கவிதை பொங்கும் நிலவு

மாறன் கணை மல்லிகை வாசம்
சிப்பி முத்து சிதறும் மத்தாப்பு

தாலாட்டும் நீலாம்பரி விடியல் பூ பாளம்
கோலத்தின் புன்னகை உயிரின் கீதம்

# செனோரிட்டா...

© ச. இளங்குமரன்



எங்கோ காற்றில் கலந்து வந்து
செவியை மீட்டும் ராகமொன்று
உன் இசை ரசனையின் நினைவை
மீட்டுகிறபோதும்..

எங்கோ சுவரோவியமாய் கண்ணில்படும்
ஓர் ஓவியம் உன்னை என்னுள்
மீட்டெடுத்து சலனப்படுத்தும்போதும்...

விடியலின் நடைபயிற்சியில்
எங்கிருந்தோ மிதந்து வந்து நாசி
தீண்டும் பெயரறியா மலர்களின்
வாசம் உன் நேசத்தை மீள நினைவூட்டி
விலகிச்செல்லும்போதும்...

முழுநிலவன்று, மதிமுகமாய்
நிறைநினைவாய் மனதை ஆக்கிரமித்து
பஞ்சுபொதியில் மறைந்து விலகும்
தருணத்திலும்....

ஒரு நல்ல கவிதையை கண்டு வாசித்து
அளவளாவும்போது உன் நினைவுகள்
தேனாறாய் பிரவாகிக்கும்போதும்...

ரம்மியமாய்
ரசித்து,
உணர்ந்து,
நுகர்ந்து,
வாசித்து,
ஒரு நொடி மனதிற்குள் புன்னகைத்து
அதற்கிடையில்,
நிகழ்கால கடமைகள் மற்றும்
பொறுப்புகள்
உணர்ந்து.....
கடந்து போய் கொண்டே இருப்பதே
நம்மிருவர் வாழ்வும்..

எம் நினைவுகள் யாவும் என்றும்
ரகசியமே...

ரகசியங்கள் தான் ரம்மியமும் கூட!!!




© மனோபாரதி

காதலித்து தோல்வியுற்றவனின் முகநூல் பதிவுகள்

உன் பார்வையை என் பக்கம் திருப்பி
மென்புன்னகையை உதிர்க்கிறாய்
முதல்முறையாய்
என்னவென்று எடுத்துக்கொள்ள?
நீ தேவதை என்பதே
நான் உன்னை நேசிப்பதற்கும்
உன்னை வெறுப்பதற்கும் காரணம்
காதல் ஒரு குழந்தைப்பருவம்
ஒரே ஒரு
முத்தம் கொடு போதும்
இறந்துவிடுகிறேன்.
என்னை பேசி காயப்படுத்தியதை விட
பேசாமல் காயப்படுத்தியதே அதிகம்
உன் மீதிருக்கும் வன்மத்தை போக்க
எனக்கு கொடு
பல லட்ச முத்தம்
ஒரு கவிதைக்கு
விதம் ஒரு முத்தம் சன்மானம் என
தீர்மானம் போட்டாய்

நானோ புதினம் எழுதலாமென
காத்திருக்கிறேன்
நீ ஒரு மஞ்சள் தேவதை
மா மஞ்சள்
பலா மஞ்சள்
வாழை மஞ்சள்
பப்பாளி மஞ்சள்
பூ மஞ்சள்
சூரிய புலரி மஞ்சள்
சந்தனம் மஞ்சள்
உன் தேகம் தங்கம் பூசிய மஞ்சள்
என் இதயம் நீ கலந்ததால் அதுவும் மஞ்சள்
வா மஞ்சள் காதல் செய்வோம்
நம் காதலுக்கு மஞ்சள் என
பெயரிடுவோம்
நீ நீராடிய நீர்த்துளியில்
வாசனை திரவியம்
செய்ய போகிறேன்
உன் முகப்பருக்களை
கண்ணாடி மேலிருக்கும்
நீர்குமிழி என்பேன்.
பிரியும் நிலை வருகையில்
நான் நானாக இருப்பேன்
நீ நீயாக இருப்பாய்
அப்போது நாம் என்ற பதம் இறந்து
போயிருக்கும்

கரையை முத்தமிடும் அலைகளுக்கு
எப்படி சொன்னாலும் புரியாது
புறப்பட்ட தடத்திற்கு திரும்பி வர
உன்னை சந்தித்த இடத்திலேயே
நகராமல் தத்தளிக்கிறது இதயம்.


◎ ஏலையா க.முருகதாசன்

# அவளை மறக்க முடியவில்லை

தயாநிதி, தான் கப்பலில் வேலை செய்ததாக எனக்குப் பலமுறை சொல்லியிருக்கிறார். கப்பல் வாழ்க்கையைப் பற்றி அவரிடம் கேட்க வேண்டுமென்று பலமுறை எண்ணியிருக்கிறேன்.ஆனால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இன்று அவரைச் சந்தித்த போது, ம்இன்றாவது சொல்லுங்களேன் உங்கள் கப்பல் கதையைழ் என்று கேட்டேன்.அவர் கொஞ்சம் தயங்கினார்.

காற்றோடு வாட்டி வதைக்கும் குளிரிலும் அவரின் கப்பல் வாழ்க்கையை கேட்டுவிட வேண்டும் என்ற ஆவல் எனக்கிருந்தது.



விரைந்து கோப்பிக்கடைக் கதவைத் திறந்து உள்ளே போனோம்.கோப்பி வாசனை உற்சாகத்தைத் தந்தது.கடை கோப்பி குடிப்பவர்களால் நிறைந்து வழிந்திருந்தது. ஆவிபறக்கும் கோப்பியைக் குடித்தபடி கதைத்துக் கொண்டிருந்தார்கள். உட்காருவதற்கு இடத்தைத் தேடின கண்கள். ஒரு மூலையில இரண்டு கதிரைகளும் ஒரு மேசையும் இருந்தன.வேகமாக அந்த இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். வேறு யாராவது வந்து அந்த கதிரைகளில் உட்கார்ந்துவிடக்கூடாது என்பதற்காக.குளிருக்கு கோப்பியும் அதைவிட கப்பல் கதையைக் கேட்க வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி நின்றது.ஊரிலை, கப்பலுக்கு வேலைக்குப் போனவர்கள் தங்கள் கப்பல் வாழ்க்கையைப் பற்றி அதிலை கொஞ்சம் இதிலை கொஞ்சமாகச் சொல்லியிருக்கிறார்கள்.தாங்கள் அனுபவித்த அந்தச் சங்கதிகளும் நடந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.ழ்சங்கதிழ் என்றால் அதற்கு என்ன அர்த்தம் என்று அறிந்து வைத்திருந்தேன்.

கப்பலுக்கு வேலைக்குப் போனவர்கள் பின்னர் திருமணம் செய்திருக்கிறார்கள். தாங்கள் அனுபவித்த ம்சங்கதியைழ் மனைவிக்குச் சொல்யலிருப்பார்களோ தெரியாது. அல்லது கப்பலுக்குப் போனால் சங்கதி நடக்காமலா போகப் போகுது என்று அதைக் கேட்காமல் மனைவிமார் விட்டிருக்கலாம்.

கோப்பிக் கடையில் வேலை செய்த பெண் எமக்கருகில் வந்து என்ன வேண்டுமென்று கேட்டாள். இரண்டு கோப்பி பெரியது என்றேன்.அவள் வடிவான பெண்,அவள் ஜேர்மனியப் பெண் அல்ல, வேறு நாட்டுப் பெண்ணாக இருக்குமோ என நினைத்தேன். அவளின் சுகந்தமான மூச்சுக் காற்று ஒரு கிறக்கத்தைக் கொடுத்தது.அவள் அழகாக சிரித்தபடி ம்இதோ கொண்டு வருகிறேன்ழ் என்று சொல்லிக் கொணடு போனாள். அவள் போவதைப் பார்த்தபடி ம்நல்ல வடிவான பெணழ்; என்றேன்.பிரேசில்காரியாக இருக்கலாம்ம்என்றார் தயாநிதி.

இந்தக் கோப்பிக்கடையைவிட்டு வெளியே போவதற்கு முன்பே தயாநிதியிடம் முழுக்கதையையும் கேட்டுவிட வேண்டுமென்ற ஆவலுடன்ழ் நீங்கள் கப்பலில் வேலை செய்வதற்கு எந்த இடத்தில் போய் கப்பலில் ஏறினீர்கள்ழ் என்றேன்.

'நாட்டைவிட்டு வெளிக்கிட்டு ஜேர்மனிக்கு வரும் வரைக்கும் கப்பலில் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லைழ்

'எப்படி அந்த எண்ணம் ஏற்பட்டதுழ்

'கம்பேர்க்கில் உள்ள எனது நண்பர்கள் சொன்னார்கள், இங்கை இருக்கிறதைவிட கப்பலில் வேலை செய்தால் காசும் வரும் சந்தோசமும் வரும் என்றார்கள்'

'காசு வரும் அது சரி, அது என்ன சந்தோசமும் வரும் என்றால்...என்ன ம் என்று நான் கேட்க, தயாநிதி தயங்கியவாறு,பிறகு சொல்கிறன்ழ் என்றார்.

எப்படியும் அந்தச் சந்தோச சங்கதியை அவர் வாயாலேயே கேட்டுவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் அவரிடம் கேள்விகளைத் தொடுத்தேன்.

'கம்பேர்க்கில் இருந்து கப்பலில் ஏறிய நீங்கள் எத்தனை வருடம் கப்பலில் வேலை செய்தீர்கள்' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே அந்த அழகான பணிப்பெண் கோப்பியைக் கொண்டு வந்து வைத்தாள்.அவளின் கிறங்கடிக்கும் அழகில் கேள்வி கேட்பது ஓரிரு விநாடிகள் தாமதமாகியது.

குளிரான சூழ்நிலைக்கு இதமான காப்பியைக் குடித்துக் கொண்டேழ்எவ்வளவு நாள் வேலை செய்தீர்கள் ம்என்றேன்.கோப்பியை அவர் ஒரு உறிஞ்சு உறிஞ்சிவிட்டுழ் பதினொரு நாட்கள் பிரான்சிலுள்ள சில துறைமுகங்களுக்கு போய் திரும்பிவிட்டேன்ழ்

'ஏன்'

'எனக்கு அந்தக் கப்பலில் வேலை செய்ய ஏனோ பிடிக்கவில்லை,திரும்பிவிட்டேன். சில நாட்களின் பின் ஒல்லாந்திலுள்ள ரொட்டர்டாம் துறைமுகத்துக்குப் போய் ஒல்லாந்து கப்பலில் வேலை செய்யத் தொடங்கினேன்'

'அந்தக் கப்பலில் எவ்வளவு காலம் வேலை செய்தனீங்கள், எங்கெல்லாம் போனீர்கள்'

‘கிட்டத்தட்ட பதினொரு மாதங்கள் வேலை செய்தன், கொலண்டுக்கும் தென்னமரிக்க நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் அந்தச் சரக்குக் கப்பல் போய் வந்ததுழ்

‘கப்பலில் எத்தனை இலங்கையர்கள் வேலை செய்தார்கள்’

‘நான் மட்டுந்தான் இலங்கையாள், மற்றவர்கள் வேறு நாட்டுக்காரர்கள்ழ்

‘கப்பலில் சண்டை சச்சரவு வருமர்’

‘வராமல் விடுமா, அடிபடுவாங்கள் பிறகு கப்ரின் எல்லாரையும் எச்சரித்துவிட்டுப் போவார்’

‘கப்பலில் வேலை செய்தவர்களில் யாரிடம் அதிகம் பயப்பட்டீர்கள்’

‘பிலிப்பைன்ஸ்காரரிடம்‘

‘ஏன்’

‘அவர்கள் பொல்லாதவர்கள்’

‘கேட்க மறந்திட்டன் நீங்கள் கப்பலுக்கு போன போது இளந்தாரிதானே எத்தனை வயது.எத்தனையாம் ஆண்டு கப்பலில் வேலைக்குப் போனீர்கள்’

‘இளந்தாரிதான், அப்ப எனக்கு இருபத்திநாலு வயது. நான் வேலைக்குப் போனது எண்பதாம் ஆண்டுழ்

‘அது சரி இந்த வயதில் காதல் வந்திருக்க வேண்டுமே’

‘ காதலிச்சன்ழ்

‘என்ணெண்டு காதலியையும் விட்டிட்டு, பெற்றோரையும் விட்டிட்டு தண்ணியை மட்டுமே நாள் பூராவும் பார்க்கிற கப்பல் வேலைக்குப் போனீர்கள்’

‘கவலைதான் என்ன செய்யிறது,வாழக் காசு வேணுமேழ்

‘கப்பலிலை போய்க் கொண்டிருக்கிறியள் சுற்றிவரக் கடல், அப்ப உங்கடை மனநிலை எப்படி இருந்தது’

‘நடுக்கடலில் விட்டது போல் என்பார்களே, அப்படித்தான் மனம் தவித்தது’

‘அந்த நேரத்தில் அப்பா அம்மாவை நினைத்தீர்களா அல்லது காதலியை நினைத்தீர்களா’

‘காதலியைத்தான் எப்பவுமே நினைத்துக் கொள்வேன்.அவளுடைய முகத்தை நினைத்துக் கொள்வேன், அவளின் சிரிப்பை நினைத்துக் கொள்வேன்.அப்பா

அம்மாவுக்கு கடிதம் எழுதும் போதெல்லாம் அவளுக்கும் எழுதுவேன்.அப்பா அம்மாவின் கடிதம் வரும்போதெல்லாம் அதில் பிள்ளைப்பாசம் இருந்தது.அவளின் கடிதத்தில் எல்லாமே இருந்தது, பரிவு பாசம் அக்கறை என்று எல்லாமே இருந்தது.நான் இருக்கிறேன் உங்களுக்காக, இந்தக் கடிதத்தில் நான் இருக்கிறேன்,கவலைப்படாதீர்கள் எவ்வளவு கெதியாக வர முடியுமோ அவ்வளவு கெதியாக வாருங்கள்.இனி இந்தக் கப்பல் வேலை வேண்டவே வேண்டாம், நானும் தவித்து நீங்களும், தவிக்கிற இந்த வேலை வேண்டாம்,பரந்திருக்கும் சமுத்திரத்தில் மிதக்கும் கப்பலில் அலையிலும் பலமாக வீசம் காற்றிலும் கப்பல் நிலைகொள்ளாமல் தவிப்பது போல உங்கள் மனம் தத்தளிப்பதை உணர்கிறேன்.கவலைப்படாதீர்கள், என்னை நினைத்துக் கொள்ளுங்கள், நானிருக்கிறேன் என்று அவள் எழுதுவாள்...'

தன் காதலியின் கடிதம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தவர் இடையில் நிறுத்தினார்.சில விநாடிகள் இருவரும் மெளமாக இருந்தோம்.அவரின் கண்கள் கலங்கியிருந்தது.கண்மடல்விட்டு கண்ணீர் வந்திடுமோ என்ற நிலையில் முகத்தை மறுபக்கம் திரும்பி கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

கோப்பியைக் குடித்து முடித்திருந்தோம்.இன்னும் குடிக்க வேண்டும் போலிருந்தது.அந்தக் கடையில் ஐந்தாறு பணிப்பெண்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.எங்களுக்குக் கோப்பி தந்த அழகியைத்தான் என் கண்கள் தேடின. அவள் நிற்கும் திசை நோக்கினேன்.அவள் தற்செயலாக நாங்கள் இருக்கும் திசைநோக்கித் திரும்ப நான் கைகளால் வரும்படி அழைத்தேன்.எமக்கருகில் வந்தவளிடம் ம்இன்னும் கோப்பி வேண்டும்ம் என்ற நான், ம்எந்தக் கேக் ருசியாக இருக்கும்ம்என்றேன்.ழ்பிறவுணி ருசியாக இருக்கும், புதிய முறையில் செய்தது, கொண்டு வரவா என்றாள்.கொண்டு வரச் சொன்னேன்.

அமைதியாக இருந்த நான், ம்துறைமுகங்களில் கப்பல் போய் நிற்கும் போது, நிற்கும் நாடுகளுக்கு போவீர்களா எவ்வளவு தூரம் போவீர்கள்ழ் என்றேன்.

'கனதூரம் போக முடியாது, ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் போக அனுமதி உண்டு, நிற்கும் நாட்களைப் பொறுத்தது' என்றார் தயாநிதி.

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, கோப்பிக்கடைப் பணிப் பெண் இரண்டு பெரிய கப்பில் கோப்பியையும் இரண்டு தட்டில் பிறவுணி கேக்கையும் கொண்டு வந்து வைத்தாள்ழ் கேக்கை முள்ளுக்கரண்டியால் பிய்த்து வாயில் போட்டு ருசி பார்த்தேன், சுவையாகவிருந்தது.தயாநிதியும் சாப்பிட்டுவிட்டு அருமையாக இருக்கிறது என்றார்.

நாங்கள் கோப்பிக்கடையின் கண்ணாடி போட்ட யன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்ததால்,அடிக்கடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தோம்,ஆகாயம் மூட்டமாகியது.மெதுவாக பனித்துகள் கொட்டத் துவங்கியது.கோப்பி குடித்துக்

கொண்டிருந்தவர்களின் தொகையும்,சூடான கோப்பியும் ருசியான கேக்கும் மனதிற்கு இதமாக இருந்தது.

'நான் ஊரில் இருந்த போது கப்பலுக்கு போய்வந்தவர்களைச் சந்தித்திருக்கிறேன், அவர்களுடன் பேசும் போது, கப்பல் துறைமுகங்களில் நிற்கும் போது, பரத்தையர்கள் வருவார்களா எனக் கேட்டிருக்கிறேன்.அங்கு எனக்குத் தெரிந்த கப்பலுக்குப் போய் வந்த ஒருவரிடம் பரத்தையர் என்று வெளிப்படையாக கேட்டதும் என்னை அவர் நிமிர்ந்து பார்த்துவிட்டு, வருவார்கள் நாங்கள் 'சங்கதிக்காரர்' என்று சொல்வோம், மற்றதை 'சங்கதி' என்று சொல்வோம் என்றார், நானும்'சங்கதிக்காரர் வருவார்களா, சங்கதியில் நீங்கள் ஈடுபட்டீர்களா' என்று கேட்க, வருவார்கள் ஆனால் 'கப்பலில் எதுவும் நடக்கவில்லை' என்றார் தயாநிதி.

அதிக நாட்கள் கப்பல் தரித்துநின்ற துறைமுகம் எதுவென்று தயாநிதியைக் கேட்ட போது, பிரேசிலுள்ள றியோ டி ஜனைரோ என்ற அவர், அங்கு பதினேழு நாட்கள் கப்பல் நின்றது என்றார்.

'பதினேழு நாட்களும் எப்படிப் பொழுது போனதுழ் என்றேன்.ழ்றியோ டி ஜனைரோ பிரேசிலுள்ள பெரிய துறைமுகம். கடைகளும் விடுதிகளும் பார்களும் நிறைந்து வழிந்த நகரம் அது.டிஸ்கோவிற்கு போவோம், குடிப்போம், டிஸ்கோவில் மேல் உடை இல்லாமல் பெண்கள் ஆடுவார்கள்.பார்த்து இரசிப்போம்.கப்பலில் எனக்குப் பொறுப்பாகவிருந்தவர், நான் ஆடுவதற்காக எழ எனது கையைப் பிடித்து நிறுத்தினார்.அவசரப்பட வேண்டாம் என்றார்.

'ஏன்'

'சில வேளைகளில் சிக்கல் வரலாம் என்பதால்'.

'இப்பவே நீங்கள் உயரமாகவும் வாட்சாட்டமாகவும் இருக்கிறியள், இளந்தாரியில் இன்னும் கம்பீரமாக இருந்திருப்பீர்கள் அழகிய உயரமான கறுப்பு,மாநிறம்,வெள்ளை என பல நிறம் கொண்ட அந்த வண்ணத்துப்பூச்சிகளைப் பாரத்த போது உங்களுடைய முறுகிய வாலிப வயது சும்மாவா இருந்ததுழ் என்றேன்.

இரண்டு நாட்களாக எந்த யோசனையும் வரவில்லை, கிளப்புக்குப் போவது டிஸ்கோ ஆடுவது,குடிப்பது என்றிருந்தேன்.ழூன்றாவது நாள் ஒரு மேசையிலிருந்து பியர் குடித்துக் கொண்டிருந்தேன்.எனக்கருகில் ஒரு பெண் வந்து உட்கார்ந்தாள்.முகத்தை நளினமாக திருப்பி சிரித்தாள்.கந்தர்வ பெண் என்பார்களே அவர்களனைவரும் இங்கேதான் பிறந்தார்களோ என வியந்தபடி அவளைப் பார்த்தேன், கொள்ளை அழகியாக இருந்தாள்.மீண்டும் ஒருமுறை தலையை அசைக்க அவளுடைய தலைமயிர் சிலிர்த்தெழுந்து அவள் மார்பில் படர்ந்தது.தலைமயிருக்கு வாசனை கொண்ட சம்பூ

போட்டுக் குளித்திருப்பாள் போல அவளின் தலைமயிரிலிருந்து வந்த வாசனை என் சுவாசத்தை சுகமாக்கியது.மீண்டும் ஒருமுறை என்னைப் பார்த்து அழகாகச் சிரித்து கைலாகு தந்துழ்ஐ ஆம் எலிசபெத், யுவர் நேம் பிளீஸ்ழ் என்றாள்.ழ்ஐ ஆம் தயாநிதிழ் என்றேன்.ழ்யு ஆர் பிறம் விச் கன்றிழ் என்றாள்ழ் ம்மை மதர் லண்ட் இஸ் சிறீலங்காழ் என்றேன்.ழ் ஒ யா ஐ கேர்ட் எபவுட் யுவர் கன்றிழ் என்றவள்,எலவ் மி ரு டான்ஸ் வித் யூழ் என்றவள் ம்யு ஆர் ஸ்மாற் யங்,டு யு சி அவர் போர்த் ஸ்கின் கலர்ஸ் ஆர் சேம்ம் என்றாள்.

இரசித்துச் சொல்லிக் கொண்டிருந்த தயாநிதி இடையில் நிறுத்தினார்.அவர் சொல்லப் போகும் சுவாரசியமான சம்பவங்களை கேட்பதில் ஆர்வம் கொண்ட நான் ம் பிறகுழ் என்றேன்.ழ்நீங்கள் விடமாட்டியள் போல' என்றவர், நான் அவளுடன் நடனமாடத் தொடங்கினேன்.அது ஒரு வித்தியாசமான உலகம்.மகிழ்ச்சிக்காக ஒரு உலகத்தை உருவாக்கியிருந்தார்கள்.அவளுடன் ஆடிக் கொண்டிருந்த போது எனது வேலைப் பொறுப்பாளர் ஒரு மேசையிலிருந்து குடித்துக் கொண்டிருந்தார், கைவிரலைக் 'என்ஜோய்' என்பது போலக் காட்டினார்.

'பியர் குடித்த போதையும் அழகிய பெண்ணின் அருகிருக்கையும்,ஆட ஆட அவளிடமிருந்து வியர்த்துக் கொட்டிய வியர்வை வாசனையும் என்னைக் கிறங்கடித்தது. சிரித்துக் கொண்டே கைகள் இரண்டையும் என் இரண்டு தோள்களில் போட்டு கழுத்தை இறுகப் பிடித்துக் கொண்டே ஆடினாள்.என்னையறியாமல் என் கைகள் அவள் இடுப்பை பிடித்துக் கொண்டன.அவள் கண்கள் எனக்கு ஏதோ ஒன்றைச் சொல்லிற்று, ஏதோ ஒன்றை வேண்டி நின்றது.அவள் இதழ்கள் லிப்ஸ்ரிக் பூசாமலே றோசப்பூ அழகில் இருந்தது.அவள் இதழ்கள் துடித்தன.அவள் இதழ்களை நோக்கி என் முகம் நெருக்கமாகியது'.

ஆடிக் களைத்துப் போன இருவரும் உட்கார்ந்தோம்.ஆடியதால் போதை குறைந்திருந்தது.இன்னுமொரு பியர் குடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அவளிடம்ம் டு யு வான்ற் பியர் ம் என்றேன்.ழ் தாங்ஸ் ஐ நெவர் றிங் எனி அல்ககோல் அன்ட் பியர்ழ் என்றாள். எனக்கு வியப்பாக இருந்தது.ஆச்சரியத்துடன் ம்இஸ் இற் றியலி என்றேன்.ழ்யாழ் என்றவள்,ழ்பிளீஸ் டு நொற் றிங் புறொம் நவ் ரு றில் யுவர் லைப்ழ் என்றாள்.நான் அதிசயத்து நின்றேன்.இவள் யார், என்னை மனதாலும் விரும்புகிறாளா.ஒரு மனைவி சொல்வது போல ஒரு காதலி சொல்வது போல அக்கறையாக சொல்கிறாளே.அவள் சொல்லை மீற முடியாது கட்டுப்பட்டு நின்றேன். எனது தோளோடு சாய்ந்து என்னை இறுக கட்டிப் பிடித்தாள், எனக்கு மட்டுமே கேட்கக்கூடியதாக காதுக்குள் ம்சால் வி கோ ரு த கொட்டல்ழ் என்றவள் எழுந்து எனது கைக்குள் தனது கையைவிட்டு நெருக்கமாகினாள்.

அந்த டிஸ்கோ பாரைவிட்டு மந்திரிச்சுவிட்ட கோழி மாதிரி அவளுடன் நடந்து

கொண்டிருந்தேன்.கணவன் மனைவி அல்லது காதலன் காதலி கைகளோடு கைகளை இணைத்து நடப்பது போல நடந்து விடுதியைச் சென்றடைந்தோம்.

வரவேற்பு இடத்தில் அந்த விடுதியில் பதினைந்து நாட்கள் தங்கப் போவதற்கான பணத்தைக் கட்டினேன்.அழகான வசதியான அறைக்குள் போனதும், தேநீர் குடிப்போமா என்றவள், தேநீருடன் இரவுச் சாப்பாட்டுக்கும் அறைக்குள் இருந்த தொலைபேசி மூலம் ஓடர் கொடுத்தாள்

'இருங்கள் குளித்துவிட்டு வருகிறேன்' என்று போனவள்.ஐந்து நிமிடத்தில் குளித்துவிட்டு வந்தாள்.நான் படுக்கையில் தலையனை ஒன்றை எடுத்து தலைக்குப் பின் வைத்தவாறு சரிந்து உட்கார்ந்திருந்தேன்.குளித்துவிட்டு வந்தவள் நெருங்கி உட்கார்ந்தவாறு அவள் என் மார்பில் தலைவைத்தபடியே தனது இடது கை விரல்களால் முதுகின் ஓரத்தில் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள்.

எனது உடலும் மனமும் சங்கதியை நோக்கி நின்றது.எனது மனநிலையை உணர்ந்தவளாக ம்கொஞ்சம் பொறுங்கள் சாப்பாடு வந்ததும் சாப்பிட்டிட்டு......ம் என்று சிரித்தாள்.

கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.அவள் போய்க் கதவைத் திறந்தாள்.உணவுத் தட்டுடன் நின்றவரிடம் உணவ வாங்கி மேசையில் அவள் வைத்தபடியே வாருங்கள் சாப்பிடுவோம் என்றாள்.

நான் கனவு காண்கிறேனா என நினைத்துக் கொண்டேன்.ஏனென்றால் கம்பேர்க்கில் எனது நண்பர்கள், துறைமுகத்தில் கப்பல் நின்றதும் கப்பலுக்குள்ளேயே அப்படிப்பட்டவளை வருவினம்.எல்லாம் முடிந்ததும் போய்விடுவினம், இல்லாவிட்டால் விடுதிக்கு அழைத்துப் போய் அது முடிந்ததும் போய்விடுவினம். அவைக்கு பணந்தான் குறி என்றார்கள்.

அதற்கு முற்றிலும் மாறாக ஒரு அன்பான மனைவியாக, இனிமையான காதலியாக எலிசபெத் நடந்து கொள்வதை என்னால் நம்ப முடியாமலிருந்தது.சுவையான சாப்பாடு,அருமையான தேநீர் ஆனால் மனம் அதையெல்லாம் தாண்டி நின்றது.ம்ரேஸ்ரி பூட் அன்ட் ரேஸ்ரி ரீ என்றேன்.'ஒப்கோர்ஸ்ம் என்றவள் ம்திஸ் ரீ மேக்ட் பை யுவர் கன்றி ரீ பவுடர் ம் என்றாள்.

இருவரும் போய் படுக்கையில் சரிந்து உட்கார்ந்தோம்.அவள் அருகிலிருந்த றிமோற் கொண்ரோலால் மின்விளக்கின் வெளிச்சத்தைக் குறைத்தாள்.

'அது எனக்குப் புது அனுபவம்.கலாச்சாரம் பண்பாடு என்பதை தாண்டி எனது உடலின் தேவையை மனமும் மூளையும் செயல்படுத்தியது.முதல் இரவு என்றால் இப்படித்தான் இருக்குமோ என்று நினைத்தேன்.

இடையில் நிறுத்திய தயாநிதி என்னை உற்றுப் பார்த்தார்.அவரை இடைமறித்து கேள்வி கேட்கவேண்டிய தேவை எனக்கு ஏற்படவில்லை.அவர் எலிசபெத்தின் அன்பில் நனைந்தும் அமிழ்ந்தும் போய் அணுவணுவாக இரசித்து இரசித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

'அந்த ஒரு நாளுடன் அவளின் நட்பு முடிந்துவிட்டதா' என்றேன்.

'இல்லையில்லை பதினான்கு நாட்களாக அவளோடு இருந்தேன்.காலையில் எழுந்து கப்பலுக்கு போய்விடுவேன் அவளும் தனது வீட்டுக்குப் போய்விடுவாள்.வேலை முடிந்து விடுதிக்குப் போவேன். அங்கே அறையில் எனக்காக அவள் காத்திருப்பாள். ஒவ்வொரு நாளும் வீட்டில் செய்தது என்று விதம் விதமான சாப்பாடு கொண்டு வந்து சாப்பிடத் தருவாள்.சில நாட்களில் பழங்கள் வெட்டிக் கொண்டு வந்து தருவாள். காதலித்துக் கல்யாணம் செய்த பின் வரும் நாட்களாக அந்தப் பதிமூன்று நாட்களும் இருந்தன.உடல்கள் இரண்டு சேர்வது வெறும் உடலுக்குரியது அல்ல, அது ஆழமான காதலுக்கும் உரியது என்று நினைத்துக் கொண்டேன்.அவள் அன்பான மனைவியாக எனக்கு அந்த பதினான்கு நாட்களும் நினைத்துப் பார்க்க முடியாத மகிழ்ச்சியைத் தந்தாள்ழ்

தயாநிதியை உற்றுக் கவனித்தேன் அவர் குரல் தளதளக்கத் தொடங்கியது.

'நீங்கள் பிரேசிலைவிட்டுப் போன அந்தக் கடைசி நாள் அவளுக்கும் உங்களுக்கும் எப்படி இருந்ததுழ் என்றேன்.

தயாநிதி மௌனமானார்.கண்கள் கலங்கியது கண்களைத் துடைத்துக் கொண்ட அவர் பனி பெய்வதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.'மறக்க முடியவில்லை, இன்றளவும் அவளை மறக்கமுடியவில்லை ' என்றவர் என் பக்கம் திரும்பி' பிரேசிலைவிட்டு போவதற்கு முதல் இரவு எல்லாம் முடிந்த பின் அவள் என்னையே உற்றுப் பார்த்தாள்' கண்கள் கசிய இரு இதழ்களையும் மடித்து அழுகையை நிறுத்த முயற்சித்தவாறு' ஆர் யு லீவ் ருமாரோ பிறம் திஸ் கார்பர்' என்றாள் பதில் சொல்லத் தயங்கினேன், தட்டுத்தாடுமாறி' யேஸ் ஐ வில்' என்றேன்.' நோ நோ பிளீஸ் ஸரேய் கியர் வித் மி பிளீஸ் டு நொற் கோ பிளீஸ் டு நொற் கோ' என்று தோளில் முகம் வைத்து குலுங்கிக் குலுங்கி அழுதாள்.அவளின் கண்ணீர் என் தோளை நனைத்தது.அவள் தலையைத் தடவியவாறு 'பிளீஸ் எலவ் மி, ஐ காவ் ஏ லவர் இன் மை கன்றி'என்றேன். அவளோ ' ஐ அக்சப்ற் பிளீஸ் பிறிங் கேர் ரு கியர் ஓர் பிறிங் மி ரு யுவர் கன்றி' என்று குலுங்கிக் குலுங்கி அழுதாள்.அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

'மை டியர் வில் யு பிளீஸ் அண்டர்ஸ்ராண்ட் மி, ஐ கனொற் டு எனிதிங் பிக்கோஸ்' என்று நான் முடிக்குமுன் 'பிக்கோஸ் ஐ ஆம் ஏ பிறஸ்ரிரியுட்,இஸ் இற்' என்று நெகிழ்ந்து நின்றாள்.' நோ நோ நொற் தற் மீனிங்,யு ஆர் லைக் அஸ் மை வைப்,

யு ஆர் லைக் அஸ் மை லவர், ஐ நெவர் போரகெற் யு இன்மை வோல் லைப் ரில் டை' என்றேன்.அன்றிரவு முழுக்க அவள் அழுது கொண்டிருந்தாள்.நானும் அழுதேன்.இறைவா இப்படி ஒருத்தியை ஏன் சந்திக்க வைத்தாய் என்று வெதும்பிக் கொண்டிருந்தேன்.

அடுத்த நாள் விடிய எழுந்த போது அவள் முகம் கண்ணீரால் கோடு கிழித்து காய்ந்து போயிருந்தது.நான் ஒருத்தியைக் காதலிக்காவிட்டால் இங்கேயே இவளுடனேயே இருந்திருக்கலாம் என்று என் மனம் அல்லாடியது.அவள் எனக்காக காத்திருக்கிறாள். இவளும் எனக்காக ஏங்குகிறாள்.இருதலைக் கொள்ளி எறும்பாய் நான் தவித்தேன்.

நானும் அவளும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை.வெளியூருக்குப் போகும் கணவனை, வெளியூருக்குப் போகும் காதலனை அனுப்பி வைக்க சோர்ந்த முகத்துடன் கப்பல் நிற்கும் இடத்திற்கு வரும் மனைவி போல் காதலி போல் என் இடுப்பை இறுகப் பற்றிக் கொண்டே வந்தாள்.

கப்பல் புறப்படுவதற்கு நேரம் நெருங்க நெருங்க அவள் பதைபதைப்பதை உணர்ந்தேன்.என்னாலும் அவளை விட்டுப் பிரிய மனமில்லை.

'மை டியர் எலிசபெத் ஐ.....' என்று சொல்லி முடிக்குமுன் கட்டி அணைத்து முத்தம் கொடுத்தாள்.நெஞ்சில் முகம் பதித்து அழுதாள்.'ஓ மை கோட்...வை...வை' என என் நெஞ்சில் இடித்து இடித்து அழுதாள்.அவளைப் பரிவாக தடவிக் கொடுத்தேன்.எனது கால்கள் அந்த இடத்தைவிட்டு நகர மறுத்தது.

ஆனால் என்ன செய்வது.அவளைப் பிரியும் இறுதி நேரத்தில் அவள் சொன்ன வார்த்தை இன்றும் எனக்குள் எதிரொலிக்கிறது.

என்ன சொன்னாள் என்று அவரைக் கேட்கவில்லை.அவள்ழ் யு ஆர் மை கஸ்பண்ட் ரில் டை, நோ மோர் புறொஸ்ரிரியூசன்,திஸ் இஸ் மை கார்ட் பொறமிஸ்' என்றாள்.

'மெதுவாக எனது கால்கள் அவளைவிட்டு நகரத் தொடங்கியது.அவள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.பாரமான மனதுடன் கப்பலில் காலடி எடுத்து வைத்தேன்'

'சில நாட்கள் வேலை செய்துவிட்டு கம்பேர்க் வந்துவிட்டேன். கம்பேர்க்கில் இருந்த போது அவளின் கடிதம் வந்தது. தான் இப்பொழுது விவசாயம் செய்து சீவிக்கிறேன் இனி எப்பொழுது இருவரும் சந்திப்போமோ தெரியாது இறைவன்தான் அருள வேண்டும் என்று எழுதியிருந்தாள்.நானும் பதிலஇ போட்டுக் கொண்டிருந்தேன் அவள் எழுதுவதும் நான் பதில் போடுவதுமாக ஐந்து மாதங்கள் தொடர்ந்தன. பிறகு அவளிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை. நான் எழுதிய கடிதத்திற்கும் அவளிடமிருந்து பதில் வரவில;லை. ஊருக்குப் போய் என் காதலியைக் கல்யாணம் செய்தேன்.எலிசபெத்தை என்னால் மறக்க முடியவில்லை.இங்கே இருக்கிறாள்ழ் என்று

நெஞ்சைக் காட்டினார்.

கோப்பிக்கடைப் பணிப்பெண் வந்தாள்ழ் எவ்வளவு காசென்றேன்ழ் பில்லை தந்து கொண்டேழ் உங்களை ஒரு நாளும் இங்கே காணவில்லை நீங்கள் எந்த நாடு என்றாள்.ழ்சிறீலங்காழ் என்றேன். ம்நீங்கள்...' 'பிறேசில் சிறுவயதிலேயே அக்காவுடன் வந்து கம்பேர்க்கில் இருந்தோம்.அக்கா தனது கஸ்பண்டை தேடி வந்தவர் என்றாள்.

நானும் தயாநிதியும் அவளைத் திகைப்புடன் பார்த்தோம் அேக்காவுடைய படம் ஏதாவது வைத்திருக்கிறீர்களாயு என்றேன்.இருக்குது என்று பேர்சிக்குள்ளிருந்து தானும் தமக்கையும் இருந்த படத்தை என்னிடம் நீட்டினாள்.வாங்கிக் கொண்டே அக்காவுக்கு என்ன பெயர் என்றேன் ம்எலிசபெத்ழ் என்றாள்.

'எலிசபெத்தா' என்ற தயாநிதி படத்தை வாங்கிப் பார்த்தார்.திகைத்துப் போனார் வியப்பும் மகிழ்வும் கவலையுமாக அவர் தடுமாறினார்.'உங்கள் எலிசபெத்தா' என்றேன். 'அவளேதான்ழ் என்றவர் எழுந்து வேகமாக கடையைவிட்டு வெளியே போனார்.

பணிப்பெண் திகைத்துப் போய் நின்றாள். படத்தைப் பார்த்ததும் அவர் முகம் மாறியதைக் கவனித்த பணிப்பெண், ஏன் அக்காவின் படத்தைப் பார்த்ததும் எழுந்து போனார் என்றாள்.

நானும் பதட்டத்தில் இருந்தேன்.தமக்கையின் தொழிலைச் சொல்லாமல் பிரேசிலில் உங்கள் அக்காவைச் சந்தித்து காதலித்தவர்.இப்ப அவர் வேறு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டார். ஆனால் இன்றளவும் உங்கள் அக்காவை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்றேன்.

தயாநிதி எழுந்து போனதையும் நான் படபடப்புடன் பேசிக் கொண்டிருந்ததையும் கவனித்த மற்ற இரு பணிப்பெண்கள் எமக்கருகில் வந்து என்ன நடந்தது என்றார்கள். எலிசபெத்தின் தங்கை வேகமாக எழுந்து போனவர் அக்காவின் காதலன் என்று அவர்களுக்கு சொல்லி காசை இவரிடம் வாங்குங்கள் என்று சொல்லவிட்டு கடையை விட்டு வெளியே வந்த எலிசபெத்தின் தங்கை 'யக்கற்றைப் போட்டுக் கொண்டு போ' என்று சொல்லியும் கேளாதவளாக பனியில் கால் புதையப் புதைய தனது தமக்கையின் காதலனை நோக்கி ஓடினாள்.


தயாநிதி அந்தக் குளிரிலும் ஒரு மரத்தில் சாய்ந்தபடி நின்றார்.கடையைவிட்டு வெளியே வந்த நான் அவர்களருகில் செல்லாது அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் பணிப்பெண் தயாநிதியின் கைகள் இரண்டையும் பிடித்தவாறு நின்றாள்.என்னையும் கடையையும் அவள; திரும்பிப் பார்த்த போது அவள் அழுவது தெரிந்தது.

இனி........

© கௌந்தி. மு

# விலைக்கு ஆரோக்கியம்

வாய்விட்டுச் சிரிப்பதை
விலக்கிவைத்துவிட்டு
உயிர்த்தெழும்
லாபிங் தெரபிக்களால் நோய்
விட்டுப்போகப்போவதில்லை




மரங்களை வெட்டி
மாளிகையாக்கிவிட்டு
விலைக்கு வாங்கப்படும்
ஆக்ஸிஜன் சிலிண்டர்களால்
சுவாசங்கள் சீராகப்போவதில்லை

அரிசி உணவை ஒதுக்கிவிட்டு
நொறுங்க திண்ணப்படும்
பீஸாக்களால்
நூறு வயது
வாழ்ந்துவிடப்போவதில்லை

கூடி வாழ்வதை
கேடென நினைத்து
கூட்டுக்குள் ஒடுங்கிவிட்டு
மனதில் உள்ளதை கொட்ட
மன நல மருத்துவரை தேடினால்
கோடி நன்மைக்
கொட்டிவிடப்போவதில்லை

பணம் பத்தும் செய்யுமென
இருந்துவிட்டு
விலை குடுத்து வாங்க
ஆரோக்கியங்களையும் தேடினால்
கிடைத்துவிடப்போவதுமில்லை......

# "தொலைத்த சுவர்க்கம்"

© கீர்த்தனா



இந்த மூதாட்டி விரும்பாத உலகத்தை தான் இன்று நாம் அனைவரும் விரும்புகிறோம்...

கிராமத்தில் வளர்ந்த சிறுவன் இன்று நகரத்தில் வாழ்கிறான் ..மாதம் ஒருமுறை வளர்த்தவளை பார்க்க வரும் அவன் மூதாட்டியிடம் வந்து எப்படி தான் இந்த வீட்டில் இருக்கிறாய் என்கிறான்..

கிழவியோ அட கிறுக்கு பைய மவனே இங்க தானா டா வளர்ந்த படிச்சா இப்போ என்ன டா இப்படி சொல்லுற என்று கேட்கும் அந்த கிழவியின் வாயை மூடச் சொல்கிறான் ...

ஊருக்கு கிளம்புகிறான் அடுத்த வாரம் கிழவி இறந்து விடுகிறாள் ... திடீரென்று அவனும் திருமணமும் செய்து கொள்கிறான் ... குழந்தையும் பிறக்கிறது ... கேள்விகள் கேட்க தயாராகி வளர்கிறது ...

நகர வாழ்க்கையை பற்றி சொல்லி தரும் தகப்பன் அவன் வாழ்ந்த கிராம வாழ்க்கையும் கிழவி பற்றியும் சொல்வதற்கு தயங்குகிறான் வெட்கப்படுவதுடன் கௌரவ குறைச்சலாக எண்ணுகிறான்...

ஆண்டு விடுமுறையை கழிக்க அம்மாவின் ஊருக்கு செல்ல தயாராகுகிறான்... மனைவியின் ஊரோ கிராமத்து வாழ்வியலை சார்ந்தது...

குழந்தையோ பிடித்து வைக்க ஆள் இல்லாமல் பத்துக்கு பத்து கட்டிட வாழ்க்கையிலிருந்து விலகி பறந்து விரிந்த வானத்தின் நடுவே ஒரு மலையின் அடிவாரத்தில் அமைந்த கிராமத்தின் மண் வாசனையை அச்சிறுவனால் உணர முடிகிறது ..அவனால் காக்கைகளின் அழகை ரசிக்க முடிகிறது ... குயிலின் ஒலியை இசைக்க முடிகிறது ...

தூரமாக விளையாடும் குழந்தைகளின் விளையாட்டை அவனால் வியப்பாக பார்க்க மட்டுமே முடிகின்றது ....அதை பற்றி தெரிந்திருக்க முடியவில்லையென்று கவலை அச்சிறுவனின் இயல்பிலே அறிய முடிகின்றது...

அப்பாவிடம் சென்று கேள்விகளை எழுப்புகிறான் ...

கிட்டிப்புள் ,கோலி ,ஊது முத்து ,பம்பரம்,குதிரைக்கல்லு ,கோழிக்கால் , பச்சைக் குதிரை,பொய்க்கால் நடை,கொட்டாங் குச்சி நடை, நொண்டி , பல்லாங்குழி,கல்லா மண்ணா, கண்ணாமூச்சி ,லாக் அண்ட் கீ இவையெல்லாம் என்னவென்று மூச்சு விட நேரம் கொடுக்காது கேட்கிறான் அச்சிறுவன்..

இதில் ஒன்றை நாம் அனைவரும் கூர்ந்து கவனிக்க வேண்டும்...மூச்சு விடமால் மனப்பாடம் செய்யப் பழகிக் கொள்கிறான் இது தான் இன்றைய கல்விமுறை..புரிந்து படிக்கும் தன்மையை ஒரு குழந்தையிடம் நாம் தானே அழிக்கின்றோம் அதுவாகவே இல்லை என்பதை உணர வேண்டும்..

சரி கதைக்கு வருவோம் ... இத்தனை கேள்விக்கும் பதில் ஒருவரியிலென்று சிறுவன் எதிர்பார்த்து இருக்க மாட்டான் தன் அப்பாவிடமிருந்து... இதெல்லாம் கிராமத்து விளையாட்டு என்று..

இது தான் இன்றைய உலக நடப்பு ... விளையாட்டுக்களிலே கிராமம் நகரம் என்ற பாகுபாடு பெற்றோர்களிடம் இருப்பின் குழந்தைகளிடம் எதிர்ப்பார்ப்பது எந்தவிதத்திலும் சரியாக இருக்காது...



© அகமது ஃபைசல்
இலங்கை

# த லை கீ ழ்

யாராச்சும் பேப்பரை தலை கீழா வைத்து படிப்பாங்களா? பேப்பர் என்றால் சும்மா வெறும் பேப்பர் இல்லை. தினப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாத சஞ் சிகை, சினிமா புத்தகம் எல்லாம்தான். முதன் முதலில் எல்லோரும் தலை கீழாகத்தான் எழுதுவோம். பிறகு போகப் போக நேராக எழுத ஆரம்பித்துவிடுவோம். ஆனால் இவன் இன்னமும் தலைகீழாகத்தான் எழுதுகிறான். மாறவேயில்லை. வயசு என்ன? இப்போதும் கூட தலை கீழாகத்தான் எழுதுகிறான். இவன் தலை கீழாக எழுதுவதை அவனே வாசிக்க வேண்டும். அப்படி அவன் வாசித்தால் எல்லோருக்கும் நன்றாகப் புரியும். பின்னே என்ன குழப்பம் இவன் இப்படியே எழுதட்டும், வாசிக்கட்டும் என்று இவன் உம்மாவும் சொல்லிவிட்டாள். வாப்பா எதுவும் சொல்லாமலே விட்டுவிட்டார்.

மரத்தில் இலைகள் எல்லாம் தலை கீழாகத்தானே இருக்கு. அது நமக்கு புரியவில்லையா? யாரும் மரத்தை வாசிக்க படித்து பட்டம் பெற வேண்டுமா? என்று தன் மகனைப்பற்றி கதை எடுப்பவர்களுக்கு இவன் உம்மா கொடுக்கும் பதில் இதுதான். இவனுக்கு பெயர் என்ன என்று நினைக்கிறீங்க. இவனுக்கு வாப்பா வைத்த பெயர் - இவன்-

வாப்பாவின் கூட்டாளிகள் மகனைப் பற்றிக் கேட்டால் "இன்றைக்கு எந்த மனிதன்

நேராக நிற்கிறான் யாரைப் பாரு தலைகீழாத்தானே நிற்கிறான்" என்பது அவரின் நறுக்கென்ற பதில். இது இவனுடைய ஊரில் எல்லாத் தெருக்களிலும், பேச்சளக்கும் எல்லோரும் அறிந்து வைத்திருக்கும் விடயம்.

இவன் பள்ளிக் கூடத்து வாத்தியார் மிகவும் பொறுமையான மனிசன். அவரிடம் அப்பியாசக் கொபியையும் தலை கீழாய்த்தான் நீட்டுவான். எல்லாப் பாடங்களிலும் ழு இந்த அடையாளத்தை இடுவார். பசுவோடு சேர்ந்தால் புலியும் புல் தின்னுமாம் என்பதுபோல ழு இப்படி தலைகீழாய்த் தானும் எழுதுகிறோம் என்று தெரியாமல் இவன் கொப்பிகளில் ஆரம்பித்துவிட்டார்.

ஆனாலும் அதிக மார்க் இட்டிருப்பார். *80,93* இவன் கொப்பிகளில் எங்கு பார்த்தாலும் இருக்கும். "உன் தலைமேல் எழுதிய எழுத்துடா இது" என்று தொப்பை வயிறு குலுங்க சிரிப்பார். இவன் வாத்தியார் கேட்கும் கேள்விகளுக்கு வாயால் நேராக பதில் சொல்வான். இவனிடம் வாத்தியார் "வாயால் எழுதேன்" என்று பல முறை சொல்லியிருக்கிறார்.

இப்படித்தான் ஒரு முறை இவன் சிறு பிள்ளையாக இருக்கும் சமயம் கையைப் பிடித்து நேராக எழுதப் பழக்கியும் பார்த்தாள் உம்மா றாவியா. அவள் கைகளிலே இவன் தலை கீழாய் உறங்கத் தொடங்கிவிட்டான். றாவியாவும் உடம்பு பெருத்த ஆள் என்பதால் கொஞ்ச நேரம் கைகளில் தாங்கியிருந்துவிட்டு இவன் நன்றாக உறங்கியதும் கட்டிலில் கொண்டுபோய் கிடத்திவிடுவாள்.

இரண்டு கால்களும் இல்லாமல் சக்கரங்கள் பொருத்திய சிறு பலகைத் துண்டில் எச்ச வாயை வைத்து அமர்ந்து கொண்டு ஒரு கைக்கு பாதணி அணிந்து அந்தக் கையால் கெத்திக் கெத்தி பல வீதிகளைக் கடக்கும் விதியுடையவர்களும் தலை கீழ் ஆனாவர்கள்தான். சூரியன், நிலவுக்குக் கூட கால்கள் இல்லை ஆனால் தலை நிமிர்ந்து நிற்கிறதே. எல்லோருக்கும், எல்லாவற்றிக்கும் ஒரு திறமை, ஆற்றல் இருக்கிறது. இதை நீங்கள் போற்ற வேண்டாம் தூற்றாமலிருந்தால் போதுமே. என்று பாடசாலை விழாக்களில் பேசி எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்ட இவன்தான் வீட்டிலே மூத்த பிள்ளை. இரண்டாவது, பெண். ஊமை. பிறவியிலே. பார்த்தால் ஊமை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். முகத்தில் அப்படியொரு வெளிச்சம். கழுத்தில் சின்னதாக ஒரு அரைப் பவுனும் இருக்காது தங்க மாலை. எட்டு அல்லது ஒன்பது துளிப் பாலில் ஒரு துளி கறுப்பு பொட்டு வைத்தாற்போல் கண்களும். அவளைத் தூக்கும் அழகின் இறகுகள் ஆகின.

மூன்று வயசு இருக்கும்போது வீட்டைத் தலைகீழாக்காமல் தூங்கவே மாட்டான். இவன். "டேய் இவன விர்ரா அந்த கோழிய தலகீழா புடிக்காத கொத்தும் என்ட இவனே கோழிய விர்ரா..ஆ...." என்று கத்திக் கத்தி இவனோடு பெரும் பாடாப்

போச்சு றாவியாவுக்கு. இப்போது இவனுக்கு இருபத்தி நாலு வயசு இருக்கும். ஒரு பதின்நான்கு வயசு இருக்கும் போது வாப்பாவின் விசிறியை எடுத்து கொசு அடிப்பான். அடித்த கொசுக்களை தலைகீழாக வரிசைப் படுத்தி வைப்பான். அதை இந்த இருபத்தி நாலு வயசிலும் மறக்காமல் செய்து வருகிறான்.

இவனோடு மேற்படிப்பைத் தொடர வெளியூர் கிளம்பிய நண்பர்களையும் சேர்த்து ரூமில் மூன்று பேர்தான். கடந்த ஆறு மாதங்களும் ரூமில் சுவாரசியமாக கழிந்தன. ஒரு நாள் இவன் ஊரில் இருந்து வரும் போது கொண்டுவந்த மண் சட்டியில் பசும் பாலை சூடாக்கிக் கொண்டிருந்தான் பால் சூடாகி பொங்கி வரும் போது

" டேய் மச்சான் இங்க பாரு இந்த பால தலைகீழா பிடிச்சித் தூக்கிக் காட்டுறன்" என்று பொங்கி வந்த பாலை சிறு கோப்பையினால் அள்ளி கையை மேலே உயர்த்தி மீண்டும் மீண்டும் சட்டிக்குள் ஊற்றினான்.

அதிசயமென்று ஓடிவந்து பார்த்த நண்பர்களில் ஒருவன்

"என்ற வாப்பா இவன் பின்னால போனா தலைக்க இருக்கிறதும் அழிஞ்சி போயுடும் ஆள விடு நான் படிக்கனும்" என்று சொல்லிச் சென்று ரூமில் அடைந்து கொண்டான். இரண்டு நாளைக்கு முன்தான் தன் தங்கச்சிக்கு கல்யாணம் என்று சொல்லி பெட்டி படுக்கையை கட்டியவன் இன்னும் திரும்பி வரவில்லை.

அந்த வார கல்லூரி விடுமுறையை ஊரிலே கழிக்க பஸ் ஏறி விட்டார்கள் இவன் நண்பர்கள் இருவரும். ஊருக்குப் போய் இறங்கிய பின் தான் ஊர் தலைகீழாகிக் கிடப்பது தெரிய வந்தது.

எண்ணிலடங்கா வண்ணத்துப் பூச்சிகள். பல நிறங்களில் ஊரையே நிறைத்துப் பறந்து கொண்டிருந்தன. ஆள் நடமாட்டம் மிகக் குறைவு. - சிறுவர்களின் கண்ணில் படாமல் பூத்தது அந்த வண்ணத்துப் பூக்கள்- என்றாலே தலை கீழ்தான்.

ஒரு பூச்சை எட்டிப் பிடிப்போமே என்று இவன் நண்பர்கள் இவர்களுக்கும் தோணவேயில்லை பாருங்களேன்.

"நம்மட ஊர இந்த வண்ணத்துப் பூச்சிகள்தான் தூக்கி இப்புடித் தலகீழா போட்டிருக்குமோ" என்று பேசுவதிலேயே குறியாய் இருந்தார்கள்.

ஊருக்குத் தெற்கே இருக்கும் புளிய மரத்தில்; சொல்லும் போதே எச்சில் ஊறுது. அவ்வளவு இனிப்பும், புளிப்பும் கலந்த பழங்கள் குலை குலையாத் தொங்கும்.

மரத்தின் கீழ் இவனும் தலை கீழாய்த் தொங்குகின்றான். அருகில் சென்று கேட்ட நண்பர்களுக்கு; வண்ணத்துப் பூச்சிகளை தலை கீழாய் நின்று பார்த்தால் ஒரு பூந்தோட்டம் எழுந்து பறப்பது போலிருக்கும் என்று சொல்கிறான். இவனுக்கு பைத்தியம்

பிடித்துவிட்டது என்று அவர்கள் எண்ணாமல் போனால் அதுவும் தலைகீழ்தான். இவன் பேச்சைக் கேட்டு நின்ற குளத்துப் பள்ளி வாத்தியார் அக்கம் பக்கம் யாராச்சும் வர்ராங்களா என்று பார்த்துவிட்டு ஒரு புறமாக ஒதுங்கி தலைகீழாய் நின்று வண்ணத்துப் பூச்சிகளைப் பார்க்கத் தொடங்கினார். இதை கண்டும் காணாதவர்கள்போல் கடந்து செல்கிறார்கள் இவனின் நண்பர்கள் இருவரும். வாத்தியாரின் தொப்பை வயிறு அவரை ஒரு நிமிசம் கூட தலை கீழாய் நிற்க விடவில்லை.

இன்னும் சில தினங்களே இருக்கின்றன இவன் தங்கையின் கல்யாணத்திற்கு. மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்த தகவலைச் சொல்ல இவனை ஊரெங்கும் தேடித் திரிகிறாள் றாவியா.

பட்டாம் பூச்சிகள் தலை மேல் பறந்தால், அதன் நிழல்கள் தலை கீழாகத்தான் பறக்கின்றன.

என்று தனக்குள்ளே பேசிக்கொண்டு தலை கால் புரியாத சந்தோசத்தில் குதித்துத் திரிந்த இவனைக் கண்ட றாவியா கையோடு வீட்டிற்கு அழைத்துச் சென்று "மன வீடே தலை கீழாக் கிடக்கு கெதியா வெளிசாக்கனும்டா தங்கச்சிட கலியாண வேலயும் தலக்கி மேல கிடக்கு நீ இப்புடி தல கீழா நின்டு திரிஞ்சா எப்புடிடா மன" என்றதும்

"அங்க பாரு உம்மோ சுவருல பல்லியும் தல கீழாத்தான் இரிக்கி.. ஹி..ஹி.. ஹா.." சத்தமாக சிரித்துவிட்டான்.

"இவனுக்கு எல்லாம் பகடிதான்" என்று முதுகில் செல்லமாய் தட்டிவிட்டாள் றாவியா.

இவனுக்கு தலைகீழாய் பாடம் சொல்லிக் கொடுக்க முடியாது என்று இவனைத் தனியே கூப்பிட்டு கல்லூரிக்கு இனி வரவேண்டாம் என்று அதிபர் சொன்னதை உம்மாவைத் தவிர வேறு யாரிடமும் இவன் சொல்லவில்லை.

"கோ..றாவியா..ஆ..கோ..ஒ..வெளியால வாகா றாவியோ.." பட படத்த பதட்டம் நிறைந்த குரலில் செய்னுதீன் மனைவி ஓடி வந்து

"இவர்ர போட்டுலதான உன்ட புரிசனும் கடலுக்கு போற"

"அதுக்கென்னடி இப்ப" அவள் தோளைக் குலுக்கிக் குலுக்கி கேட்டாள் றாவியா.

"நடுக் கடல்ல போட்டு தல கீழா பெரன்டுட்டாம்டி" சொன்னதுதான் தாமதம்

"என்ட அல்லோ…ஓ.. என்ற அல்லோ…ஓ.. நான் என்ன செய்வன் இப்ப…டே…மகேன்… வாடோ..ஓ..போய்ப் பாக்க..ஏ.."

ஒப்பாரியோடு வந்த றாவியாவின் துடி துடித்த குரலுக்கு பதில் குரலாய்

“எங்க போய் யார பாக்கப்போற றாவியா” கணவனின் குரல்.

கொஞ்ச நேரம் ஆடிப்போன றாவியா எதிரில் வந்து நின்ற புரிசனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

“போட்டு கடல்ல பெரன்டுட்டாமே..”

இது செய்னுதீன் மனைவி.

“எவன் சொன்ன..கத...அது கரையேரக்க கொஞ்சம் லோடு கூடிட்டு.. இவனுகள் எல்லாத்தையும் தல கீழாத்தான் சொல்வானுகள்.. ஒரு பிரச்சினையுமில்ல..” என்றதும் றாவியா விட்டாள் பாரு ஒரு பெரும் மூச்சு அருகில் வந்த பட்டாம் பூச்சிக் கூட்டத்தை ஒதுக்கிக்கொண்டு போனது.

“இஞ்சப் பாருங்க புள்ளட கலியாணம் முடியங்காட்டிலும் கடலுக்கு போக வேணாம்” என்று கட்டளை போட்டாள்.

“வாங்கோ ஊட்ட போக..ரோட்டுல நின்டு பேசாம...இனி ஊரே தெரண்டு வரப்போகுது..

மாப்புள வீட்டயும் கோல் பண்ணி சொல்லுங்க பிரச்சன ஒன்டுமில்லண்ணு.. கேள்விப்பட்டு கேள்விப்பட்டு வார ஆக்கள நான் பாக்குறன் நீங்க போய் தண்ணிய வாருங்கோ..”

நிறுத்தாமல் பேசிய றாவியா மீண்டும் “இஞ்சப் பாருங்கோ இந்த கலியாணத்த ஒரு எசகு பிசகும் வந்துடாம நடத்தி முடிச்சோமென்டா ஏழு கடலையும் தாண்டின மாதிரித்தான்..போய்த் தண்ணிய வாருங்கோ..நான் சமக்கிறன்”

“ப்...பா...நீ பேசப் புடிச்சா தொங்கலே தெரியமாட்டா” என்றவாறு தொண்டைக்குள்ளிருந்து வந்த சளியை சுவர் ஓரத்தில் துப்பிவிட்டு பூனை பேண்டு மூடுவது போல மூடி கிணற்றடிக்குச் சென்றார் றாவியாவின் கணவன் கபூர்.

கிணற்றடிக் கிடுகு வேலியில் அவர் வழமையாக செருகி வைத்த பிறஸ்ஸை எடுத்து வாய் நிறைய நுரை தள்ள பல் துலக்கிக் கொண்டு வாசலில் நிற்கும் நெல்லி மரத்துக்கும், கிணற்றடிக்கும் திரும்பித் திரும்பி நடந்து கொண்டிருக்கும் கபூரின் மனதில் சிறு கவலை.

“இன்னும் குளிக்காம கெணத்தடியில என்னதான் நடக்குது கெணத்துத் தண்ணிய ஒவ்வொன்டா எண்ணுறயளா..?” என்ற றாவியாவின் குரல் கிணற்றடிக் கிடுகு வேலியை பிய்த்தடித்துக் கொண்டு வந்தமாத்திரத்தில் கபூரின் மனதுக்குள்ளிருந்த கவலையின் கதவை “படார்” என அடைத்துவிட்டது.

கல்யாணத்துக்கான வேலைகள் தொடங்கிவிட்ட இந்த தருணத்தில் வீட்டுச் சுவர்களுக்கு பெயிண்ட் பூசும் ஆட்களும் வந்து வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். இனி றாவியாவுக்கு ஒரு இடத்தில் அமரும் அவகாசமும் பறிபோய்விட்டது. வீசிக்கொண்டிருக்கும் மெல்லிய காற்றில் பெயிண்ட் வாசமும் கலந்து பக்கத்து வீடுகளில் இருப்பவர்களுக்கு கல்யாணச் சாப்பாட்டை ஞாபகமூட்டியது.

கபூரின் மனதுக்குள் ஒரு குடைவு. முகமே சரியில்லை. உட்சாகமும் இல்லை என்னமோ போலிருந்தார்.

“என்ன மொகமெல்லாம் வாடி வதங்கினாப்போலிருக்கு. ஒடம்புக்கு ஏதுமென்டா சொல்லுங்க டொக்டருகிட்ட போகலாம்” என்று அவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் கணவனை நெருங்கி பரிவாக கேட்டாள் றாவியா.

“எனக்கு என்ன ஒடம்புக்கு நான் நல்லாத்தான் இருக்கன்...வாய் பேசாப் புள்ள கல்யாணம்...பண்ணிக்கிட்டு வாழப்போகுது..அதான் மனசு நெனச்சு கொஞ்சம் கவல வருது..” என்றார்.

தன் கவலையை வெளிக்காட்டாமல் ஒரு தியாகிபோல் நின்றாள் றாவியா.

ஒரு படியாக கல்யாணம், சாப்பாடு, மருதாணி, பாக்கு, வெற்றிலை, புது உடுப்பு, சொந்த பந்தங்களின் வரவு, செலவு எல்லாம் முடிந்துவிட்டது.

அது மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் முதல் நாள் இரவு. “வாய் பேசா ஊமைய கல்யாணம் பண்ணிக்க ஊரில் இப்படி நாலு பேர் இருந்தால் போதும் அல்லாஹ் அள்ளிக் கொடுப்பான் இந்த ஊருக்கு செல்வத்த” என்று கல்யாணத்திற்கு வந்தவர்களில் பாதிப் பேரு மெது மெதுவாக பேசிக் கொண்டிருந்ததன் எதிரொலியாக இன்னும் இவன் காதுகளில் ஒலிக்கிறது.

நண்பர்களை வரவேற்ற களைப்பில் ஒரு வாழைப் பழத்தைக் கையில் எடுத்து தோலுரித்து மெது மெதுவாக சாப்பிட்டு ஒரு கிளாஸ் குளிர் பானத்தையும் குடித்துவிட்டு மேசை மீது அந்தக் கிளாஸை தலை கீழாக வைத்துச் சென்றான் இவன் தனது அறைக்கு.

வழமை போல் பொழுது புலர்கிறது. கல்யாணம் நடந்து ஓய்ந்த வீடு எப்படி இருக்கும்.?

எங்கு பார்த்தாலும் சுறுட்டி எறியப்பட்ட தாள்த் துண்டுகளும், வாழைப்பழ கோதுகளும் கலைந்து கிடக்கும் பிளாஸ்டிக் கதிரைகளும், புதிய பெயிண்ட்டு பூசப்பட்ட சுவர்களின் சில இடங்களில் தடவப்பட்டிருக்கும் சுண்ணாம்பும், காகங்கள் வந்து தாகம் தீர்த்து அலம்பிக் குளித்துவிட்டுப் போய் சில மணி நேரம் ஆன நீர்த் தேக்கம் போல் அமைதியாக கிடந்தது வீடு.

விடியற் காலை ஆறு மணியை மீறிக்கொண்டுபோகும் ஹால் மணிக்கூட்டு முட்கள்.

“டேய் மகேன்…எழுந்திருடா..உங்க வாப்பா எங்கடா படுத்திருக்காரு காணயுமில்ல.. ஊடெல்லாம் தேடிட்டன்..நீயும் எழும்பித் தேடு மனிசன் எங்கடா போய்த் தொலஞ் சாரு..” இது றாவியா.

ஙி;“கொஞ்சம் பொறுங்க என்ன ஏதென்டு தெரியாம பொரியாதொங்கோஞ்உம்மா” என்று சொல்லியவாறு தலையணையை இரவெல்லாம் முட்டி மோதிய முகத்துடன் எழுந்தான் இவன்.

“இன்னா வாராங்கம்மா வாப்பா” விரிந்து கிடந்த கேற்றைத் தள்ளி மெதுவாக அடைத்துவிட்டு மௌனமாக வந்தார் கபூர்.

பேய் முழி முழித்தாள் றாவியா.

“மகேன் இங்க கொஞ்சம் வா..” என்று வாசலில் கேட்பாரற்றுக் கிடந்த கால் தட்டியைத் தூக்கி உதறி உள்ளிருந்த மண்ணையெல்லாம் வெளியேற்றிவிட்டு வீட்டின் இடது பக்கமாக இருக்கும் தனி அறைக்கு முன்பதாக போட்டுவிட்டு உள்ளே நுழைகிறார் கபூர்.

“என்னாப்பா” என்றான் இவன் அறையினுள்ளே இருந்து கொண்டு.

“தலகீழா நின்னு பாத்தா வண்ணத்துப் பூச்சிகள் வருதாமே..ஏன்டா…உன்ட ஸ்க்கூல் வாத்தியாரு சொன்னாரு..நானும் அந்த புளிய மரத்தடிக்குப் போய் தலகீழா நின்னுட்டுதான் வர்றன் அப்புடி ஒன்டையும் காணலியடா..” என்று

மகனின் காதுக்குள் குசு குசுத்தார் கபூர். இவனின் வாயிலிருந்து வந்தது அடக்க முடியாத சிரிப்பு. “அது…ஹி…ஹி..” சிரித்தபடி அறையை விட்டு வெளியேறுகிறான் இவன்.

“என்னயாம் வாப்பாவும் மகனும் காலமில்லாக் காலம் சிரிச்சிக் கொட்டுறயள் என்றாள் றாவியா நடந்துகொண்டு.

நல்ல நேரம் பார்த்து புதுத் தம்பதியினரின் அறையிலிருந்து “ங்குவா…ங்குவா.. ங்குவா..” குழந்தை அழும் சத்தம் வந்தது.

“என்னடியிது இப்பதிய புள்ள அழுற சத்தம்” என்றார்.

“அது மருமகன்ட டெலிபோன்லயாக்கும் யாரோ கோல் எடுக்குறாங்க..நீங்களுமா தலகீழா யோசிக்கத் தொடங்கிட்டயள்” என்று சொல்லிக்கொண்டு தன் புடவை முந்தானையை இடுப்பில் எடுத்து இறுக்கமாக செருகி நடந்தாள் றாவியா.

© மு.ச.சதீஷ்குமார்

# ஊர்க்காலம்

ஊரெல்லாம்
அம்மாவின் அழகை பேசியபோது
எனக்கும் அம்மாவை போன்றே
வெண்ணிற கைகள்
நானும் மனசுக்குள்
பேசியவாறு
ஆண்டுகளை சுழற்றினேன
அம்மாவும்
நூலை சுழற்றினாள் சிவப்பு சாயத்தில்..
சுழற்சியின் நடுவே
அம்மாவின்
வெண்ணிற கைகளை விழுங்கியது
வறுமையின் நிறம் சிவப்பு...
இன்று வரை
சிவப்பில் வெண்மையை
தேடிக்கொண்டேயிருக்கிறேன்..



© கயல்

கொளுத்திய காட்டைக் கிளறுங்
கிளியாயுன் நினைவுகள்
நினைவுகளின்றிக் கூட வாழ்ந்துவிட
முடியும் என்னால்.
நீ நேசித்த இந்தப் பாழுடலை
எங்கே புதைக்க?
புதைக்கப் புதைக்கப் பூக்கும்
தாவரமென்பாயே
இன்றேனொரு பிரிவை
அறைந்து போனாய்
போன ஜென்மத்து
உறவெனச் சொல்லி
முத்திட்ட இதழ்களால்
இனி பேச ஏதுமில்லையுன்
பெயர் தவிர
தவிரவும் நீயில்லா
இக்காலை தந்த
நம்மைச் சந்திக்க வைத்த
இறையைக் கூப்பிடென்
சிதை கொளுத்த

## © கோபி சேகுவேரா



# உன்னைக் கொண்டிருத்தல்

என் கையிலிருக்கும் உன் முத்தம்
இதைபோலவே
உன் கையிலிருக்கும் என் முத்தம்
நம்மை கொண்டிருக்கிறது
இதை எழுதும் என் இதே உணர்வை
இதை படிக்க உனக்கு வாய்த்தால்
என் அதே உணர்வை நீ சுமப்பாய்
இன்று பெய்யவிருக்கும் பெருமழை
நம்மை சுமந்துதானே பெய்யும்
இன்றும் நாளையும்
அதே நம் நனைவு கொண்டே
இப்போது நானொரு பாடலை
பாடிக்கொண்டிருப்பதை போல
நீயும் வேறொரு பாடலை
பாடிக்கொண்டிருக்கலாம்
இந்த பாடல்களில் நம்மைதவிர
வேறென்ன இருக்கிறது
நான் உன்னைக்
கொண்டிருப்பதைபோல
நீ என்னை கொண்டிருப்பதைபோல
நம்மை எல்லாம் கொண்டிருக்கிறது



# நீ நிகழ உடன் நான் நிகழவே


என் பெரும் காதலை
ஒரே எமோஜியில் அடக்க முடிவதில்லை
30 நொடி வீடியோக்களில்
கையடக்கமாய் கொண்டிருக்க
முடிவதில்லை
1:1 டிபிக்களால் அத்தனை
எளிதாக உணர்த்தமுடிவதில்லை
எப்படி ஒரே பாடலில்
இளையராஜாவை கொண்டிருக்க
முடியாதோ
அதேபோல் ஒரே நிகழ்வில்
உன்னை கொண்டிருக்க முடியாது
நிகழ்ந்த, நிகழும், நிகழவிருக்கும் யாவும்
நிகழவிடுதலெல்லாம் நீ நிகழ
உடன் நான் நிகழவே
ஒரு பாடலின் ஒரே வரிகளாக
அத்தனை சமரசம் கொண்டிருக்கும்
இந்த மௌன முணுமுணுப்பு
நம்மை நிகழவிட்டு
நீண்டநேரமாகிவிட்டது


# இருத்தல் இல்லாமை

யாருமில்லாத இரவில்
நாமுமில்லை என்பது அவ்வளவு
சௌகரியமில்லை
வழக்கம் போல் யாரையோ
எழுதுவதாக நினைத்து
நம்மை எழுதுவது பழக்கமாகி விட்டது
இருப்பதென்பதில் என்ன இருக்கிறதோ
இல்லாமலிருப்பதிலும் எல்லாம்
இருக்கிறது
யாருமில்லை என்று சொல்வதைவிட
நானுமில்லை என்பதில் சுகமுண்டு
பெரும் தீர்க்கமுண்டு
வாழ்வின் கடைசிவரை
ஆச்சர்யம் சுமந்த வண்ணத்துப்பூச்சி
இறந்த பிறகு இழுத்துச் செல்லும்
எறும்பின் ஆச்சர்யம் காலம் அறியுமோ
யாருமில்லாத இரவு
அவசியமற்றதாகவும்
நாமில்லாத இல்லாமை
அவசியமென்றும்
இருள் அமிழ்ந்து தேடுகிறேன்
இருத்தலின் இல்லாமையும்
இல்லாமையின் இருத்தலையும்

## © கா.ந.கல்யாணசுந்தரம்

வியாபிக்கும்
மௌனப் பெருவெளி மௌனித்த
இரவுத் திண்ணையில் யாரோ
வாசிக்கிறான் புல்லாங்குழல்... கடலின்
மொத்த அலைகளையும் வாரிச் சுருட்டி
தனது
விரல்நுனிகளில் வடியவைக்கிறான்
இசையின் அலைகளை ! உனக்கும்
எனக்குமான
இடைவெளிகளை இட்டு நிரப்புகிறது
இந்த இரவு நேரம் ... அடர்
பனிப்பொழிவில்
உனது உருவம்
மெல்லிய நீரோவியமாய்த் தெரிகிறது !
வியாபிக்கும்
மௌனப்
பெருவெளியில் இருவர் மட்டுமே
அமர்ந்திருப்பது அந்த
இசைக்கலைஞனுக்கு
எப்படித் தெரியும் ? எப்படியோ
விடியலுக்குள்
தெருக்களின் நீளம்
குறையுமென்பது தெரிகிறது ...
தள்ளிப்போக
எனக்கு விருப்பமில்லை .... சாண
மெழுகிய தெருவாசலில் அரிசிமா
கோலத்தை
ருசிக்கக் காத்திருக்கும் ஒற்றை
எறும்பாய்





அந்த ஈரத்தரையில் நான்
மெல்ல ஊர்ந்துகொண்டிருப்பேன் உனது
காலடித்தடம் ஸ்பரிசிக்கும் வரை...

© வசந்தன். சேலம்

# நெடியில் சுடரும் ஒளி

நிம்மதியற்ற
பொழுதுகளில் கிடைக்கும் மதுக்கிழங்கு
ஜாமநாயின் வெறியை குறைக்கும்
வல்லமை கொண்டிருக்கிறது

இரவின் வெற்றுடம்பின்
மயிர்க்கால்களில் கசிந்தேறும் நெடி
பால்யத்தில் முத்தமிட்டவள் சூடியிருந்த
செம்பருத்தியாய் மணக்கின்றது

மூச்சுக்குழாயின் அடிநாதத்திலிருந்தெழும்
சுருட்டுப்புகையில் மிளிரும்
கூத்தாடி தாத்தன்களின் கோரமுகங்கள்
மனம் பிறழ்ந்தவனின் இப்பெரும் போதையை
ஆசீர்வதிக்கின்றது

பிறிதொரு பொழுதில்
அழுவதற்கு நாதியில்லாமல்
ஒரு செம்பருத்தி மணக்கும் சவக்கிடங்கில்
கிடத்திவைக்கப்படப் போகிறது
மாற்றங்கள் ஏதுமற்று
மதுகுடித்து வெடிக்கத்தயாராகும்
ஒரு திசைமாறும் உயிரை.